ஓம்:

தமிழுக்கு வெற்றி!

— பாடுவார் —

# முத்தப்ப செட்டியார்

(வரலாறு)



இளவரசன்: நா. நடராஜன்





மன்னவன் வெளியீடு

கீழச்சிவல்பட்டி: ராமநாதபுரம் மாவட்டம்

KILASAVALPATTI: Ramnad District.

 [விலை ரூ. 1—4—0

## உரிமையுரை

தகைசால் தந்தை, தமிழ்த் திருவாளர்
சி. பள. நா. நாராயணஞ் செட்டியார் அவர்களுக்கு,
இந்த நூல் காணிக்கை

" கற்றவர்கள் எல்லாம் கருத்துவைத்துப் போற்றுநிலை
பெற்றதமிழ் கற்றுப் பேணுகென ஆணையிட்டான்.
வற்றாப் பெருங்கருணை வாய்ந்தவனும் என்தந்தை
நற்றவத்தானுக்கே நல்லுரிமை யாக்குவனே!

16—5—1980.

பணிவுள்ள,
நா. நடராஜன்.

## நன்றியுரை

புதுமை மன்னரும் பொய்யில் புலவருமான முத்தப்பரின் வரலாற்றைத் தொகுத்தெழுதும் முயற்சியிலே நான் ஆறேழு ஆண்டுகள் ஈடுபட்டு ஆயிரமாயிரம் குறிப்புக்களை எழுதினேன். அவைகளில் ஒரு சிறிய பங்கை மட்டுமே வெளியிடும் இந்த நிலையில் யார் யாருக்கு நன்றி செலுத்துவதென்பதே தெரியவில்லை. எனினும் இந்த நூலை இப்பொழுது வெளியிடத் துணை செய்தவர்களுக்கும் இதனை வாங்கி யாதரிப்பதன்வழியே எனது தமிழ்ப் பணிக்கு ஊக்க மளிக்கும் பெருமக்களுக்கும் நன்றி கூறுவதென்று முடிவு செய்தேன்.

தமிழ்ப் பெருமக்களும் உயர் திருவாளர்களுமான உ. ராம. மெ. சுப. சேவு. மெய்யப்ப செட்டியார், வயிநாகரம் வே. ராமநாதன் செட்டியார், எ. நா. காசிவிசுவநாதன் செட்டி

யார், மு. அ. முத்தையா செட்டியார், கரு. முத்து. தியாக ராஜன் செட்டியார், வீ. தெ. வீரப்ப செட்டியார், சு. வி. நா. நாச்சியப்ப செட்டியார், அ. மு. மு. முருகப்ப செட்டியார், முரு. குழ. ராமநாதன் செட்டியார், கி.கிருஷ்ணப்ப செட்டியார், மு. சோமசுந்தரம் செட்டியார், மு. சு. சிதம்பரம் செட்டியார், நா. கி. நா. கி. கிருஷ்ணப்ப செட்டியார், மெ. மு. மெய்யப்ப செட்டியார், நெ. ராம. நெல்லியான் செட்டியார், சி. கரு. சி. ராம. அழகப்ப செட்டியார், மது. வயி. திருப்பதி செட்டியார், அள. சுப. சுப்பிரமணியன் செட்டியார், ராம. சே. ராம. சேதுராமன் செட்டியார், ஆ. சி. முத்தையா செட்டியார், அள. சு. சொ. சுப. மாணிக்கம் செட்டியார், கும. அண. சுப்பிரமணியன் செட்டியார், வெ. வெள்ளையப்ப செட்டியார், க. வீ. அள. மு. ராமநாதன் செட்டியார், சி. சொ. மாணிக்கம் செட்டியார், கா.ப. ராம. சேதுராமன் செட்டியார், சுப. மு. ராமசாமி செட்டியார், சுப. சித. கதிரேசன் செட்டியார், சி. சித. சிதம்பரம் செட்டியார், ந. சொ. அரு. அருணசலம் செட்டியார், வ. அள. அளகப்ப செட்டியார், சுப. அரு. சிங்காரம் செட்டியார், நா. அள. ராமசாமி செட்டியார், அ. ராம. சு. நா. சுப்பய்யா செட்டியார், வீ. மு. முருகப்ப செட்டியார், சுப. அளகப்பன், ராம. நாகப்பன், க. நாராயணன், சுவாமிநாத – சுப்பய்யா, வ. சீனிவாசன், ராம. சித. சிதம்பரம், ராம. சுப்பிரமணியன், ராம. திருநாவுக்கரசு, அழ. வள்ளியப்பா—ஆகியவர்களுக்கு என் அன்பு கலந்த நன்றியை உரிமையாக்குகிறேன்.

தமிழுக்கு வெற்றி!

தங்கல்: சென்னை.
16—5—1980.
16—2—5051.
29—5—1949.

அன்பு சிறந்த,
நா. நடராஜன்,
மேலச்சிவப்பட்டி.

—

# சிறப்புரை

“ செந்தமிழை மேலாஞ் சிவநெறியைப் பேணவென
வந்த வணிக மணிமரபான்—முந்துகலைச்
செல்வியருள் வாய்த்துயர்ந்த செம்பா வலன்பயனை
நல்கு மருட்கவியா னன்கு.

மூதறிஞர் பாடுவார் முத்தப்ப னென்னப்பே
ரோத வுதித்த வுயர்புலவன்—காதையினை
அன்னு னுதித்த அணிநகரத் தேதோன்றி
மன்னு ரணவேள் மகன்.

நற்றமிழை நாடு நடராச நண்பளிக்குக்
கற்ற புலவர் களிகூர—முற்று
முறைநடையி னாலே யுரைத்துவெளி யிட்டான்
தரைமிசையே வாழ்க தழைத்து.”

---

நலம் பெருக!

“ தருமபுர ஆதீன வித்துவான், பாலகவி,”
வயிநாகரம், வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,
தேவகோட்டை.

# முத்தப்பர் புகழ்ப் பாடல்கள்

## 1. முத்தப்பர் கழகத்துக்கு வாழ்த்து

"கூடுவார்க் கின்பங் கொடுக்கும் தமிழளித்த
பாடுவார் முத்தப்பப் பாவலர்சீர்—தேடுவார்
தேன்பொழில்சேர் கீழச்சிவப்பட்டியிற் கண்ட
வான்கழகம் வாழி வளர்ந்து!" (1)

—பாலகவி வே. ராமநாதன் செட்டியார்.

## 2. ஜெயங்கொண்டார் சதகச் சிறப்புரை

"திருமதுரை சிவப்பட்டி இளையாத குடிசெட்டி சீமான்
[என்னும்
உருமதனன் அழகப்பன் உதவிய முத்தையன் எனும்
[ஒப்பில் சிங்கம்
அருமறைகள் சாத்திரங்கள் ஆகமங்கள் புராணங்கள்
[அனைத்தும் ஆய்ந்து
பெருகு பழமொழி நூறும் கதை நூறும் சதகம்
[எனப் பேசினனல்" (2)

## 3. வெண்பாப்புலியின் வாழ்த்துப்பா

"கற்றவர் கல்விக்கு உரையாணி! நீ தங்கக் கட்டி!
[நின்னைப்
பெற்றவளே செல்வப் பேறுள்ளதாய்! நின் பிதா
[முன்செய்த
நற்றவமே தவம்! நாட்டார் வணிகர்க் கோர்
[ரத்தினம் நீ!
கொற்றவரும் புகழ் முத்தப்ப பூப! குண
ரத்னமே!" (3)

—வெண்பாப்புலி வீரகவிராயர்.

## 4. வாழ்த்தும் வணக்கமும்

"எங்கள் குலம் வாழவந்த புலவன்: முத்தாம்
இசையுடையான் செந்தமிழை ஏத்துவேனே!" (4)

—இளவரசன் நா. நடராஜன்.

தமிழுக்கு வெற்றி!

## பாடுவார் முத்தப்ப செட்டியார்

## 1. அழகப்பன் ஈன்ற அமுதப் புதல்வன்.

மலர் தலை யுலகத்து மணி முடியென்ன மதிக்கத் தகுந்த தமிழ் நாட்டில், பல்வளஞ் செறிந்த பகுதி பாண்டிவள நாடே யாகும். பாண்டி நாட்டின் நடு மண்டலமான செட்டி மார் நாட்டில் ஏறத்தாழ நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன்னால்—தம்முடைய புலமைச் சிறப்பினாலும் வாக்குத் திறமையினாலும் செட்டிமார் குலத்துக்குப் பெருவாழ்வு தந்து "நாளுக்கு நாள் புகழேற வாழ்ந்திருந்த" பெரும் புலவர், கவிமன்னர், பாடுவோர் முத்தப்ப செட்டியார்.

முத்தப்ப செட்டியார் பிறந்த காலத்தில் பலசரக்கு வர்த்தகம் நடத்தி வந்த தனவணிகர்கள், அவரது அருள் வாக்கினால் இன்று பல பல சிறந்த தொழில்களை நடத்து கிறார்கள். வணிகமக்கள் செல்வத்திலும் சிறப்பிலும் மேம் பட வேண்டுமென்பதே முத்தப்ப செட்டியாரின் குறிக்கோள். தம் காலத்துப் பாவலர்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்ந்த, முத்தப்பருக்கு "பொன் விழாவும் புகழ் விழாவும்" நிகழ்த்த வேண்டிய இந்த நாளிலேதான் அவருடைய பாடல் களைப் படிக்கத் தொடங்குகிறோம். தனவணிகர்களுக்கே ஒரு தனிச் சிறப்பைத் தந்த முத்தப்பருடைய வாழ்க்கை வரலாற்றைத் தமிழகம் அறிந்து, அவருக்குரிய சிறப்பைத் தந்து; அவரது "சாவாத்திறம் பெற்ற பாடல்களை" ஏற்றுச் சிறப்புறுமாக!

### தாயும் தந்தையும்

நெடுங்காலமாக தமிழ் வளர்த்துப் புகழ்பெற்ற புரவலர்களுக்கு இருப்பிடமாகத்திகழும் செட்டிமார் நாட்டில் மேலவட்டகையில் முதன்மை பெற்ற ஊர் கீழச்சிவப்பட்டி. *இந்த ஊர் "திருமதுரை சிவப்பட்டி" என்ற சிறப்புப்

---

*இவ்வூரில் தான் வாய்மைச் செல்வர் நாராயணஞ் செட்டியார், வணிகச் செல்வர் வயிரவன் செட்டியார் ஆகியோர் வாழ்ந்தனர்.

பெற்றது. இங்கே தனவணிகர் குலத்தில் நேமங் கோயிலைச் சேர்ந்த திருவாளர் அழகப்ப செட்டியாருக்கும் அவரது இல்லக்கிழத்தி லேட்சுமி ஆச்சிக்கும் ஒரே மகனாக கி. பி. **1760**-ம் ஆண்டிலே பாடவோர் முத்தப்ப செட்டியார் பிறந்தார்.

## பள்ளிப் படிப்பு

இவர் தமது ஐந்தாவது ஆண்டுமுதல் பத்தாவதுஆண்டு வரையில் திண்ணைப்பள்ளிக்கூடத்தில் கல்விபயின்றார். இந்த நாட்களில் இவர் படிப்பிலே அதிக அக்கரை காட்டுவதில்லை யாம். பத்தாவது ஆண்டுக்குள், தனவணிகர் தொழிலுக்கு வேண்டிய கல்வியை முத்தப்பர் முறைப்படி கற்று முடித்தார்

## எரிமலையின் முதற் பொறி

இவர் தமது பதினோராவது ஆண்டில் செட்டிமார் நாட்டில் கீழப்பத்தூரைச் சேர்ந்த அரிமழத்துக்குச் சென்றிருக்கையில் ஒரு வியப்புறு செயல் (அதிசயம்) நிகழ்ந்தது. முத்தப்பர் உறவினரொருவர் வீட்டில் நடந்த திருமணத்துக்காகச் சென்றிருந்தார். சுறுசுறுப்பே உருவான முத்தப்பர் தம்மை யொத்த பல சிறுவர்களுடன் ஓடியாடித்திரிந்தார். சிறுவர்கள் ஒரு மாந்தோப்பில் நுழைந்து மாங்காய்களைப் பறித்துத்தின்று கொண்டிருக்கும்போது, தோப்புக் காவற்காரன் வந்துவிடவே அவர்கள் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தார்கள். அது கண்ட முத்தப்பர் அவர்கள் இருந்த கிளையைப் பார்த்து "மரத்தை விட்டு விலகு" என்றார். உடனே அந்தக்கிளை முறிந்து சுவரின் மேல் விழுந்தது. முத்தப்பரின் வாக்கு முதன் முதலாகப் பலித்தது! சிறுவர்கள் குதித்துக் கொண்டு இறங்கினார்கள். அன்றுதான் முத்தப்பரின் சொல்லாற்றல் (வாக்குப்பலிதம்) வெளியுலகுக்குத் தெரிந்தது. அது முதல் மக்கள் உள்ளத்திலே முத்தப்பர் இடம் பெற்றார்

## முத்தப்பரின் முதற் பாட்டு

அரிய பாவன்மையையும் அறிவாற்றலையும் எளிதிலே பெற்ற முத்தப்பர், திருக்குறள், அறநெறிச் சாரம், நீதிநெறி விளக்கம், நாலடியார் முதலான அறநூல்களையும் பல காவியங்

களையும், ஏனைய இலக்கிய நூல்களையும் படித்துத் தேறித் தெளிந்தார். தாளும் எழுதுகோலும் இல்லாத அந்நாளிலே அருமையாகக்கிடைக்கிற ஏட்டுப் பிரதிகளை எடுத்தெழுதிக் கொண்டு—சரியான விளக்கமும் உரையும் இல்லாத அந்த நூல்களுடன் பலமுறை பழகிப் பொருளறிந்து தெளிவ தென்பது எளிதில் நிறைவேறக்கூடியதல்ல. இதனால்தான் முன்னாளில் "பதம் பிரிக்கத்தெரிந்தவன் பாதிவித்துவான்" ஆகக்கருதப்பட்டான்.

படிப்பதற்குப் பல இடையூறுகளும், படிப்பவனுக்குப் பல தொல்லைகளும் இருந்தபடியால்தான் அந்தக் காலத்துப் புலவர்களுக்கு நிறைய மதிப்பு இருந்தது. அந்த நாளில் பாரதம், நைடதம், கம்பன் கவிதை போன்ற பெருநூல் களின் ஏடு எங்கேயாவது ஒருபெரும் புலவனிடத்திலேதான் இருக்கும். ஒருவருக்கு எத்தனைதான் ஆர்வம் இருந்தாலும் ஏடுவைத்திருப்பவன் மனம் வைத்தாலொழியப் படிப்ப தென்பது முடியாது. இதனாலேதான் அறியாத மக்களிடம் கவிதையின் சுவைகளை எடுத்துச் சொல்லுவதே அக்காலப் புலவர்களின் பெரிய வேலையாயிருந்தது. தவிரவும் ஒருவ ரிருவர் செய்யுள் இயற்றினாலும், உரை நடை நூல் எழுதி னாலும் கூட அது பேச்சுத் தமிழிலிருந்து மிக வேறுபட் டிருந்தது. (இதை நினைக்கும்போது இன்றைய நிலை எவ்வள வோமேல் என்றுதான் சொல்லவேண்டும்) இந்த நிலையிலே தான் முத்தப்பரின் படிப்பு முடிவடைந்தது.

ஒரு கலைஞன்—அதிலும் பாவன்மை பெற்றவன் எப் பொழுதுமே சிந்தனையில்லாமலிருக்க முடியாது. ஒவ்வொரு அறிஞனும் ஓயாது சிந்தனை செய்து கொண்டேதான் இருக் கிறான். ஆனால் பலரது சிந்தனைக் கருத்துக்களை உலகம் அறிவதில்லை. எனவே சிந்தனையில் மிகச் சிறந்த முத்தப்பர் தமிழையும் தனவணிகர் வரலாற்றையும் ஊன்றிப் படித்த தன் பயனாக அவருக்குச் சீர்திருத்த உணர்ச்சி உண்டா யிற்று. ஜெயங்கொண்டார் சதகத்திலும் திருமுகவிலாசத் திலும் அவர் விரித்திருக்கும் செய்திகளைப் படிக்கும்போது அவருடைய சீர்திருத்த விரைவைக் காணுகிறோம். அவர்

*பூங்கோன்றைவேலங்குடிக் கல் வெட்டையும் படித்திருக்கிறார் என்று எண்ண இடமிருக்கிறது.

முத்தப்பர் நினைத்தார் "உலகியலுக்கு ஒத்த பாடல்களை எளிய நடையிலேதான் இயற்றவேண்டும்: யமகம்: திரிபு. போன்ற இலக்கண எழிலுடைய பாடல்கள் மக்களிற் பலருக்குப் பயன்படாமற் போகின்றன" என்று. இந்த உணர்ச்சி அவரது ஒவ்வொரு பாடலிலும் காணப்பெறுகிறது. இனி அவரது முதற்பாட்டைப் பார்ப்போம்.

பதினெட்டாவது ஆண்டில் முத்தப்பர் தன் தாயாரிடம் ஒருபணம் வாங்கிக்கொண்டு சந்தைக்கு உப்பு வாங்கச் சென்றார். அந்தக்காலத்தில் பணத்துக்குப் பத்துப் படி உப்பு விற்றது. சந்தைக்குச்சென்ற முத்தப்பர் திரும்பிவரும்போது முத்தப்ப செட்டியாராக மட்டும் திரும்பவில்லை. பாவலர் முத்தப்பராகத் திரும்பினார். எப்படி என்று பார்க்கலாம்.

பத்துப்படி உப்பை அளந்து கட்டி, மூட்டையைத் தூக்கிக்கொண்டு மேற்குத் திசையிலே திரும்பினார், வீட்டுக்குச் செல்வதற்காக. சந்தை வாசலுக்கு வந்ததும் "நில்லு" என்றான் †ஆயக்காரன். "ஏன்?" என்றார் முத்தப்பர். "மூன்று காசு தந்தால்தான் உப்பைக் கொண்டுபோகலாம்" என்றான், ஆயக்காரச் சிவராமன் "அப்படியானால் நான் வீட்டுக்குப்போய்க் காசு வாங்கிவந்து தந்து மூட்டையைத் தூக்கிக்கொண்டுபோகிறேன்" என்று முத்தப்பர் சொல்லியும் அவன் கேட்கவில்லை. "முடியாது, தம்பி, முடியாது" என்று அவன் சொன்னதும் முத்தப்பரின் கட்டளை பிறந்துவிட்டது!

"தாயைக்கேட்டோர் பணம் வாங்கிச்
சந்தை தேடி உப்பளந்து,
மேயப்போகும் பசுவைப்போல்
மேற்கே நாடிப் போகுங்கால்,

---

*பூங்கொன்றை (பூங்குன்றநாடு) வேலங்குடியிலுள்ள நகரச் சிவன் கோவிலில் நகரத்தார் சரித்திரக்கல் வெட்டு இருக்கிறது.

†ஆயக்காரன்—சந்தைவரி (ஆயம்) வாங்குகிறவன்.

தோயப்போட்டு வழிமறித்தான்:
தோசிமுகத்துச் சிவராமன்.
ஆயக்காரன் அவனில்லம்
அடியோடெரிந்து அழிந்திடவே!"

அவ்வளவு தான்! குத்தகைதாரின் வீட்டிலே அனல் கூவி யெரிந்தது! முத்தப்பரின் பெயர் பரவத் தலைப்பட்டது!

---

## 2. முத்தப்பரின் இடைக்காலம்

முத்தப்பரை நாம் இப்பொழுது இருபத்தைந்து ஆண்டு நிறைந்த இளைஞராகக் காணுகிறோம். முன்னே இருந்த விளையாட்டுத் தன்மையையும், படபடப்பையும் காணமுடிய வில்லை. சரியான வளர்ச்சி பெற்று விட்டார். அகன்ற மார்பு, விரிந்த நெற்றி, பரந்தமுகம், பெரியகண்கள், நீண்ட கைகள். *வலிவு மிக்க தோள்கள். நடுத்தரமான உயரம், மாநிறமான மேனி, மென்மையான வேட்டி, மேலே ஒரு துண்டு—இவைதான் தனவணிகர் குலமணியானமுத்தப்பரின் வடிவுபற்றிய எழுத்தோவியங்கள்.

முத்தப்பரது உண்மை உருவப் படத்தை நாம் காண முடியவில்லை என்றாலும் அவரது நினைவுச் சிலை (உருக்கால்) இருக்கிறது. கலை நிரம்பிய அந்தச் சிலை சேவினிப்பட்டி என்ற சிற்றூரில் இன்றும் இருக்கிறது.

இவருக்கு இருபதாவது ஆண்டிலே திருமணம் நிகழ்ந்து இப்பொழுது ஒரு ஆண் குழந்தை இருக்கிறது. இந்தக் குழந்தைக்கு முத்தப்பர் இட்டிருக்கும் செல்வப் பெயர் சர்க்கரைக் கருப்பன் செட்டி. முத்தப்பர் முன்னையைவிட இப்பொழுது நாட்டிலே பெருமக்கள், பேரறிஞர் பலரோடும் நெருங்கிப் பழகுகிறார். கோயிலூரில் மடம் அமைத்த பெருந்

---

*கையின் நீட்சி ஒருவனது சிறப்பைக் குறிக்கிறது. அக்பரின் கைகள் முழங்காலளவுக்கு நீண்டிருந்தனவாம். கம்பன்கூட இராமனைப் பற்றிக் குறிப்பிடும்போது "பனையின் நீள்கரம்" என்றும் தசரதனைப் பற்றிக் கூறும்போது "தருகை நீண்ட தசரதன்" என்றும் கூறுகிறான்.

துறவியும் "ஆண்டவர்" என்ற சிறப்புப் பெயர் பெற்றவரு மான முத்துராமலிங்க அடிகள் (காரைக்குடி)—கல்லாப்பேட் டைக் குறுநில மன்னர் முத்துப்பாலுத் தேவர்—தனவணிகர் களின் ஞானசிரியரான பாதரக்குடி சேனுபதி அடிகள்—மிதிலைப்பட்டி வேலுக் கவிராயர்—அழகிய சிற்றம்பலக் கவி-ராயர்—செவ்வூர் அழகுப் புலவர்—இராங்கியம் முத்துவீரப்ப பிள்ளை—சிவகங்கை முத்தழ ளை முதலான பெருட் புலவர்களும் பேரறிஞர்களும் இவரைப் பாராட்டிப் பரிசு அளித்ததுடன் "பாடுவோர்" என்ற பட்டத்தையும் அளித்திருக் கிறார்கள்.

முத்தப்பர் தமது இருபத்தைந்தாவது ஆண்டுக்கும் நாற்பதாவது ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்திலே பாடிய பாடல்களில் ஒருசிலவற்றை இப்பொழுது நாம் பார்ப்போம்:

## போகிற வழியிலே........!

இவருக்குப் பல ஊர்களுக்கும் செல்லவேண்டும் என்ற ஆவல் நிறைய உண்டு. பல ஊர்களுக்கும் செல்லுவார். பலரையும் கண்டு பேசி அவர்களுக்குத் தமிழார்வம் வரச் செய்வார். சென்ற இடமெல்லாம் இவருக்குச் சிறப்பான வரவேற்பு நடந்தது. ஒரு முறை இவர் செவ்வூருக்குப் போனார். உச்சிப்பொழுதில் ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தார், இவரை யாரும் வரவேற்கவில்லை. பசி ஒரு பாட்டைக் கிளப்பியது.

"எவ்வூரிற் போனாலும் எவ்வுலகிற் சென்றாலும்
செவ்வூரிற் போக மனஞ்செல்லாதே—அவ்வூரார்
பார்த்திருக்கத் தின்பார்; பசித்தார் முகம்பாரார்;
கோத்திரத்துக் குள்ள குணம்."

பாட்டைக் கேட்ட வீட்டுக்காரச் செட்டியார் பதறிப்போய் "ஐயா! வாங்க! சாப்பிடுங்க!" என்று உளறினர். சாப்பா டானதும் அவரது வேண்டுகோளுக் கிணங்கி முத்தப்பர் மேற்கண்ட பாட்டின் பின்னிரண்டடிகளை "பார்த்திருக்கத் தின்னார்; பசித்தார் முகம் பார்ப்பார்:—கோத்திரத்துக் குள்ள குணம்" என்று மாற்றியதுடன் "செவ்வூரிற் போக மனம் செல்லுமே" என்ற கருத்தையும் புகுத்தினர்.

## அரியக்குடியிலே!

ஒரு முறை அரியக்குடிக்கு இவர் சென்றபோது இவரது வரவை எதிர்பார்க்காத அவ்வூர்க்காரர்கள் பேசாம லிருந்துவிட்டார்கள். "தானாக ஒருவர் வீட்டுக்குச் செல்லுவதா?" என்ற நினைவுடன்

"அரியக்குடி நகரார் அ . . . —போத்தனையும்—

என்று பாடத் தொடங்கும்போது தெருவிலே போன ஒருவர் ஓடிவந்து "என்ன முத்தப்பய்யா எப்பொழுது வந்தீர்கள்? நம் வீட்டுக்கு வாருங்கள்" என்று அழைத்தார். எடுத்த பாட்டை முடிக்கவேண்டுமே! "சரி. அரியக்குடியிலே நகரத் தார் புள்ளி (குடும்பம்) கூடவும் வேண்டாம்; குறையவும் வேண்டாம்" என்று கருதியவராய்

"அரியக்குடி நகரார் அத்தனைபோத்தனையும்
வரிசைக் குடியாக வாழ்க!" —என்று முடித்தார்.

மறுபடி பலர் வேண்டிக்கொண்டும் இதை மாற்ற முடிய வில்லை. இன்றும் அரியக்குடியில் ஒன்று போக ஒன்று நிறைந்து புள்ளி குறையாமலும் கூடாமலும் இருந்தபடியே இருக்கிறது! பாருங்கள், பாடுவார் முத்தப்பரின் வாக்குப் பலிதத்தை!

## எவை பாழ் ஆகத்தக்கவை?

ஒரு நண்பர் "பாடுவாரே! பாழானவை எவை? சொல் லுங்கள்?" என்று கேட்டதும் முத்தப்பர்,

"தும்பியிருந்த தூண்பாழ்:
கும்பியிருந்த குளம்பாழ்:
வம்பியிருந்த மனைபாழ்:
நம்பியிருந்த கடன்பாழ்"

என்று சொன்னாராம். இது ஆழ்ந்த கருத்தடங்கிய முது மொழி.

## கல்வாசநாட்டுக் குறுநில மன்னருக்கு........

கல்லாப்பேட்டை என்ற சிற்றூர் *சில காலம் கல்வாச

---

* கீழச்சிவப்பட்டியிலிருந்து இரண்டு மைல் தொலைவிலுள்ளது

நாட்டுக்குத் தலைநகரமாயிருந்தது. முத்தப்பர் வீடு கட்டி யிருந்த இடம் கல்லாப்பேட்டைக் குறுநில மன்னரால் விலை யின்றி விடப்பெற்றது. அந்தக் காலத்தில் கூரை வீடுகள் தானே! முத்தப்பர் வீடு ஒரு முறை தீப்பட்டு எரிந்து விட்டது.

உடனே கல்லாப்பேட்டைக் குறுநில மன்னருக்குக் கீழ்க்கண்ட சீட்டுக் கவியை எழுதியனுப்பினர்.

"காடு நாடாக்கிக் கவிஞருக்குத் தந்தஅந்த
நாடு காடாக என்ன ஞாயமோ?—நீடுபுகழ்
மன்னு! துரைராஜ வாச்சகாளித் தேவ!
இன்னேரம் வந்தருள எண்ணு!"

பாட்டைப் படித்துப் பார்த்த குறுநில மன்னர் உடனே வீடு கட்டுவதற்குத் தேவையான ஓலை, வேய்ங்கம்பு ஆகியவைகளை முத்தப்பர் வீட்டுக்கு அனுப்பிவைக்கச் செய்தார்.

## பொன்னை நம்பி அழகிருக்கும் .. ....!

முத்தப்பரது மூத்த மகன் கருப்பஞ் செட்டியாருக்கு மிதிலைப்பட்டியிலே திருமணம் நடக்கவிருந்தது. நாளைக்கு *மாப்பிள்ளை வீடு போகவேண்டும் என்று இருக்கும்போது மறுபடியும் வீட்டில் தீப்பிடித்துவிட்டது. பட்ட காலிலே படும் என்பதுபோல இரண்டாவது முறையும் தீப்பட் டெரியவே யாவரும் மனங் கலங்கினர். மலை கலங்கினும் நிலை கலங்காத முத்தப்பர், கல்லாப்பேட்டைக் குறுநில மன்ன ருக்கே மறுபடியும் பின்வரும் பாடலை எழுதி யனுப்பிவைத் தார்.

"பொன்னை நம்பி அழகிருக்கும்;
பூவை நம்பி மணமிருக்கும் புகழுமேகம்
தன்னை நம்பிப் பயிரிருக்கும்;
தமிழை நம்பி உரையிருக்கும் தகைணமயன்றே!
முன்னையநாள் ராமனுக்கு
வீடணன் வந்துதவி வினைமுடித்தாற்போல

---

* மணமகன் வீட்டார் பெண்ணிருக்கும் ஊருக்குச் செல்லுவது.

உன்னை நம்பி நானிருப்பேன்.

நீ எனக்கு இவ்வேளை உதவுவாயே!"

இது அழகான கருத்துக்கள் அமைந்த பாட்டு. இந்தப் பாட்டிலே தமிழுக்குப் பெருஞ் சிறப்புக் கூறப்பட்டிருக்கிறது. உலகிலே "உரை நடை" என்பது தமிழை நம்பித் தானும் இருக்கிறது! என்ன சொல்லழுத்தம்? என்ன உறுதிப்பாடு?

இன்னும் ஒரு புதிய செய்தியும் மூன்றாவது அடியில் உள்ளது. "ராமனைப் பெரிதென மதித்து விபீஷணன் வலிந்து சென்று உதவிசெய்ததைப்போல நீயும் என்னைப் பெரிதாய் மதித்து வேண்டியதைச் செய்வாயாக" என்று பெருமிதத்துடன் நயமாக இழைத்திருக்கின்றார்!

படித்துப் பார்த்தார் "ஐயா மகன்" (ஜமீன்தார்) முத்துப்பாலுத் தேவர். முத்தப்பர் வீட்டைப் புதுப்பிக்க முடிவு செய்தார். அவ்வளவிலே முரசு முழங்கியது. *"எட்டுக் கிராமத்திலிருக்கும் அரைஞாண் கட்டிய பிள்ளை முதற்கொண்டு அத்தனை ஆண் மக்களும் தவறாமல் ஆளுக்கொரு ஓலை, ஒரு நார், ஒரு வரிச்சு (வேய்ங்கம்பு)டன் சிவப்பட்டியில் பாடுவோர் முத்தப்பையா வீட்டுக்குப் போய்ப் பொழுது விடிவதற்குள் வீட்டைப் புதுப்பித்து மண் பூசிக் கூரைவேய்ந்து கொடுத்துவிட்டு அரண்மனைக்கு வந்து சேரவேண்டும்: இது ஐயாமகன் இட்ட கட்டளை" என்று முரசு முழங்கக் கேட்ட மக்கள் திரண்டெழுந்தனர். பொழுது புலரும்போது முத்தப்பர் வீடு புது வீடாகத் திகழ்ந்தது! கவிஞரின் மனம் போல எல்லாம் மங்கலமாக—எவ்விதக் குறைவுமின்றி—நிறைவேறியது.

---

கல்லாப்பேட்டை ஜமீனைச் சேர்ந்த எட்டுக் கிராமங்கள்:—

1. கல்லாப்பேட்டை, 2. வடக்கிளையாத்தக்குடி, 3. தெற்கிளையாத்தக்குடி, 4 அச்சரம்பட்டி, 5. முத்தூா, 6. விராமதி, 7. கீரணிப்பட்டி, 8. அ.சிவப்பட்டி. "[illegible]" என வழங்கப்பெறுகிறது.

## மக்களுக்கிட்ட வாஞ்சைப் பெயர்.

முத்தப்பருக்கு ஐந்து மக்கள் இருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையிலே சிறந்தவர்கள். (இன்றும் இவர்களிலே நால்வர் வழியிலே வந்த மக்கள் நலத்துடன் வாழ்கிறார்கள்) மூத்தவர் கருப்பஞ் செட்டியாரும் மூன்றுமவரான [illegible] செட்டியாரும் இனிமை[illegible]சுவதில் வல்ல[illegible]. இரண்டாமவரான மெய்யபப செட்டியார் மணம் பரப்பும் மனம் வாய்ந்தவர். மற்றவரில் மூத்தவர் அழகில் சிறந்தவர். அவருக்கு "ராமன் செட்டியார்" என்றே பெயரும் அமைந்தது. இளையவரான ஏகப்ப செட்டியார் செல்வாக்குப் பெறவும் செயலாற்றவும் வல்லவராயிருந்தார்.

இந்த ஐந்து மக்களைப்பற்றி அவர்கள் பண்பை விளக்கும் முறையிலே அடியிற்கண்ட அடுக்குத் தொடரை முத்தப்பர் நண்பர்களிடம் சொல்லுவது வழக்கமாம்.

"சர்க்கரைக் கருப்பஞ் செட்டி:
சவ்வாது மெய்யன் செட்டி:
சீனி அளகன் செட்டி:
செவத்த ராமன் செட்டி:
எங்கும் பராபரம் ஏகப்ப செட்டி."

---

## பஞ்சம் தீர்த்த பாட்டு.

இவரது முப்பதாவது ஆண்டிலே இவருக்கு ஒரு பணியாள் தேவைப்பட்டது. ஆண்டி நாகப்பன் அழகிலே சிறந்த பண்டாரம்: அடுத்த ஊர்க்காரன்: அவன் இவரிடம் வந்து "ஐயா! எனக்கு ஒன்றும் சம்பளம் தரவேண்டாம்: உங்கள் அருள் இருந்தால் போதுமானது" என்று சொல்லி நெடுங்காலம் இவருக்குத் தொண்டு செய்தான். முத்தப்பர் இவனை மிக அன்பாக நடத்தினர். நாகப்பனைப் பல வழியிலும் மேம்படச் செய்தார். ஒரு அருள் வாக்காளரிடத்திலேயிருக்கிறோமென்று இவனுக்குத் தலைகால் தெரியாத பெருமை. முத்தப்பரிடம் இவன் பேரன்பு கொண்டிருந்தான்.

நாகப்பன் முத்தப்பருக்குக் குளிப்பதற்குத் தண்ணீர் இறைத்துக்கொடுப்பான். வேட்டி தோய்த்துப் போடுவான். இறை வழிபாட்டுக்கு வேண்டியவைகளைச் செய்வான். எங்கே சென்றாலும முத்தப்பருடன் கூடச் செல்வான். சமையலும் செய்வதுண்டு: இவைதான் இவனுக் கேற்பட்ட வேலை.

நாகப்பனுக்குப் பொதுநல உணர்ச்சி நிறைய ...ங்குகு. முத்தப்பர் இவனுக்கு .. வரும் தானிய தவசங்களை இவன ஏழைகளுக்குக் கொடுப்பான். ஏழைகள் நாகப்பனிடத்தில் தங்கள் துயரங்களையும் குறைபாடுகளையும் சொல்வார்கள். அவன் சமயம் பார்த்து முத்தப்பரிடம் சொல்லி அவர்களுக்கு நன்மை செய்துவைப்பான்.

ஒரு தடவை ஏழெட்டுத் திங்களாக (மாதங்களாக) மழை பெய்யவில்லை. நட்ட பயிரெல்லாம் தொலைந்துவிட்டது. உழவர்கள் வானத்தை நம்பி மறுபடியும் விதைத்த பயிர்களோ உயிருக்கு மன்றாடிக்கொண்டிருந்தன. கதிரவனின் வெம்மையைப் பசும்பயிரின் மென்மை வெல்ல முடியுமா? உழவர்கள் முத்தப்பரிடம் ஓடிவந்து அவர் காலில் விழுந்து முறையிட்டார்கள். முத்தப்பர் "பதறாதீர்கள்!" என்று கையமர்த்தி அவர்களையும் அழைத்துக்கொண்டு ஊரையடுத்துள்ள காட்டுக்கருப்பய்யா கோயிலுக்குப் போனார். வெட்ட வெளியிலே—கொம்பாலயத்திலே ஒளி பரப்பி நிற்கும் கருப்பரைப் பார்த்தார். அதே கண்ணால் வறட்சியே வடிவாய் நிற்கும் ஏழைகளையும் பார்த்தார். அவர் நெஞ்சம் உருகி ஒரு பாட்டானது.

"ஆட்டைக் கவர்ந்தவரை ஆட்டினுய்முன் பெனது
பாட்டுக்கிரங்கி யருள் பாலிப்பாய்!—வாட்டமுறு
நாட்டுப் பயல்கள் நலமுற்று வாழ்ந்திடவே
காட்டுக்கருப்ப! மழை காட்டு!"

ஈட்டுப் பயல்கள் என்பதிலே எத்தனை அன்பு ஒலிக்கிறது பார்த்தீர்களா? நாட்டு மக்கள் அத்தனை பேரும் தான் பெற்ற மக்களாக—உரிமை பெற்ற "பயல்கள்" ஆக ஆகிவிட்டார்கள்! பாட்டு முடியும் தறுவாயில் வானத்தில் மேகம் நிறைந்து மின்னல் ஒளி விட்டது. அன்றிரவு "நாடு

தழைக்க நல்ல மழை" பெய்தது: மக்கள் எல்லோரும் "ஏதோ செட்டியாரய்யா வாக்கினாலே மழையைக் கண்ணாலே கண்டோம். அவர் குடும்பம் என்றும் பதினாறும் இருக்கவேண்டும்" என்று வாழ்த்தினார்கள். "இந்தப் பாட்டை இப்பொழுதும் மழையில்லாத காலத்தில் உள்ளன்போடு படித்து இறைவனை வழிபட்டால் கட்டாயம் மழை பெய்யும்" என்று செய்தறிந்தவர்கள் சொல்கிறார்கள். இது தான் பாட்டின் வலிமை! இந்த வலிமை முத்தப்பர் போன்ற அருளாளர்களின் பாடல்களிலேதான் அமையும்.

## குபேரன் கடன் கேட்கிறான்!

தலைப்பைப் பார்த்ததும் "இதென்ன இது? குபேரன் யாரிடம் கடன் கேட்டான்? நம்மிடத்தில் கேட்டால் தடையில்லாமல் கொடுக்கலாமே! சமயத்துக்குக் கொடுத்தால் பின்னீடு மிக்க நயம் வருமே" என்று நினைக்கத் தோன்றும். சரி. இருக்கட்டும். குபேரன் நம்மைக் கேட்கிறபோதல்லவா நாம் கொடுக்கவேண்டும்?

முத்தப்பர் ஒரு முறை உப்பு விற்பதற்காக ஒரு சிற்றூருக்குச் சென்றிருந்தார். உப்பு விற்கவேயில்லை. கையிலும் காசில்லை. கட்டுச் சோறும் கிடையாது. என்ன செய்வது? பசிக் கிறுகிறுப்பினாலே இவர் தரையில் சாய்ந்ததைப் பார்த்த செட்டியாரொருவர் தான் கொண்டுவந்திருந்த சோற்றில் சரிபாதியை இவருக்குக் கொடுத்தார். சாப்பிட்டதும் முத்தப்பர் நினைத்தார் "செட்டி தன் வீடு தேடி வரும் ஏழைகளுக்கும் பிச்சை யிடுகிறான். வர்த்தகம் செய்யவந்த இடத்திலும் இனத்தவர் பசியைத் தீர்க்கிறான்" என்ற எண்ணம் அவரைப் பெருமகிழ்வு பெறச்செய்தது. அந்த மகிழ்ச்சியிலே எழுந்த—சோறு தந்தவருக்குச் சுவை நலம் தந்த—குபேரனுக்கும் மேலாக்க—எழுந்த பாடல் அடியில் வருவதுதான்.

"அன்போ டறுசுவையோ டன்னமளித் தாதரவாய்
என்பசியைத் தீர்த்துவிட்ட தென்னினமே—பின்பிந்
நகரத்தார் தங்களிடம் நண்ணிக் குபேரன்
பகருடன் கேட்கவரும் பாங்கு."

பசி நேரத்திலே சோறு கொடுத்த அவர் முத்தப்பரின் பாட்டிலே குபேரனுக்கும் மேற்பட்டவராக—அவனுக்கே கடன் கொடுக்கும் அளவுக்கு வசதியுடையவராக—ஆகிவிட்டார் என்னே அவரது பெரும் பேறு!

## கோட்டையூர் பற்றிய பாடல்கள்.

இவர் கோட்டையூர் சென்றிருந்தபோது இவரை வரவேற்றுப் பெருமைப்படுத்திய நகரத்தார்கள் வேண்டுகோளுக்கிணங்க இவர் பாடிய பாடல்கள் பின்வருபவை: நல்ல பொருட் சிறப்புடைய பாடலகள்.

"கோட்டையூர் மாவணிகர் கொண்டுவிற்றுக் கொண்டுவந்த
வட்டையெல்லாம் கண்டு இயம்பினேம்—கோட்டையூர்
நாட்டைவிட்டுச் சென்ற நகரத்தார் யாவரும்பொன்
கோட்டையுடன் வருவர் கொண்டு."

"நீர்பெருகி ஊற்றெடுக்கும் நீண்டபுகழ்க் கோட்டை
யூர்பெருகி ஊற்றெடுக்கும் ஊருணிகள்—சீர்பெருகி
அன்னஊரன்ன அருஞ்செல்வம் வீற்றிருக்கும்
பின்னும் ஓர்ஊழி பேரிட்டு."

## நாகூரிலே நடத்திய விந்தை

ஒரு முறை இவரும் கோயினூர் அடியவர் ஒருவருமாக நாகூருக்குச் சென்றார்கள். அந்தக்காலத்தில் சமயவெறுப்பு (மதத்துவேஷம்) குழந்தைகளுக்கு முலைப்பாலோடு ஊட்டப்பட்டதல்லவா? அதன் பயனாக நாகூருக்குச் செல்லும் தமிழர்கள் கல்லெறியும் மண்ணெறியும் வசைப்பேச்சும் ஏற்று மனம்வருந்தித் திரும்பவேண்டியதிருந்தது.

இவர்கள் போகும் வழியிலே விளையாடிக் கொண்டிருந்த துருக்கச் சிறுவர்கள் இவர்களைக் கண்டதும் கல்லையும் மண்ணையும் வாரியிறைத்து "வாய்தந்தன சொல்லி" வசையாடினர். முத்தபபர் கேலியாகத் "துட்டுக்கொரு குட்டியானாலும் துருக்கக் குட்டியாகாது" என்று சொன்னார். இதைக்கேட்ட சிறுவர்கள் வழியை மறித்துக்கொண்டு துன்

புறத்தினர். மனம் பொறுத முத்தப்பர் உளம்நொந்து பாடினார்:—

“மன்னர் புகழ் நாகூரில் திருமாலே!
நினைக்காண வருங்காலததில்
என்ன சொல்வோம் சிலபயல்கள்
எங்கள்மேல் மண்வாரி யிறைத்துப்பின்னும்
சொன்ன சொன்ன உதாசினங்கள் மெத்தஉள:
ஆகையினால் துரையே! நீதான்
உன்னிடத்தில் ஞாயம் நடுவிருந்தாற் கேட்பாய்!
உலகளந்தாய்! இதுகடமை உனக்குத்தானே!”

பாடிவிட்டு ஊருக்குள் போய்விட்டார்கள். விளையாடிக் களைத்து வீடுசென்ற சிறுவர்கள் வயிற்றுப்போக்கால் வலி யிழந்து மயங்கிக் கிடந்தனர். நடந்தவைகளை யறிந்த ஒரு துருக்கப் பெரியார் எல்லோரையும் கூட்டிக்கொண்டுவந்து மன்னிப்புக்கேட்டார். சிறுவர்கள் முத்தப்பரை வணங்கி னார்கள். “இனிமேல் எங்கள் செட்டியார்களுக்காகத் தனியே ஒரு குருக்கள் இருக்கவேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங் கள்” என்று முத்தப்பர் சொல்லவே அப்படியே ஏற்பாடு செய்தார்கள். அதுமுதல் நாகூருக்குச் செல்வோருக்கு எந்தத் தொல்லையும் இல்லாது போயிற்று! முத்தப்பருக்கு அன்று நாகூர் மக்கள் அளித்த வரவேற்பு இன்று ஒவ்வொரு செட்டியாருக்கும் கிடைக்கிறது. நாகூரிலே இப்போதும் “செட்டியார் சாஹிப்” என்று தனிக்குருக்கள் இருந்து வருகிறார்!

நமக்கும் தமிழர்களுக்கும் அழியாத பெரும் புகழைத் தேடிவைத்த பாடுவார் முத்தப்பரை மறந்திருப்பது அழகல்ல. இனியாவது அவரை உணர்ந்து போற்றி வழிபடுவோமாக! அவரது தெய்வத்திருவாக்கு தமிழர்களின்—வணிகர்களின் புது முயற்சிகளுக்கெல்லாம் துணைசெய்து வெற்றிதந்து நம்மை வாழ்வாற்றில் வலித்துச் சென்று வாழ்விப்பதாக!

## 3. முத்தப்பரும் பேராசிரியரும்

முத்தப்பர் காலத்திலே பாதரக்குடியில் தனவணிகர்களின் *ஞானுசிரியராக இருந்த சேனுதிபதிஅடிகளார் இவரிடத்தில் பெரு நேயம் வைத்திருந்தார். அவர் இவருக்குப் பல சிறப்புகளேத் தந்துள்ளார். நெடுநாள் இவர்கள் இருவரும் இணைபிரியாது வாழ்ந்திருந்தார்கள். சேனுபதி யடிகளாரைப் பற்றி முத்தப்பர் பாடியபாடல்கள் மிகப்பல: அவற்றுள் புகழ்ப்பாடல்களிற் சிலவற்றைக் கீழே தந்துள்ளேன்.

"பூவே! கருணைக்கடலே! நவநிதிப் பொக்கிஷமே!
கோவே! இருபத்தொருவள்ளலே! கொடைக்கேற்ற கற்பக்
காவே! செவ்வந்தி மறையோனுதவிய கண்மணியே!
தேவே! புனவயற் சேனுபதிக் குரு தேசிகனே!"

"திருவளருமார்பா! செகம்அளந்த தாளா!
கருமுகிலே! செங்கமலக்கண்ணு—அருளளிக்கும்
சீதரனே! எங்கள் குரு தேசிக சேனுபதியை
மாதவனே! காத்தருள்செய் வாய்!"

"கைகைக்கு நாயகம்: தென்கூடல் சுந்தரம்: வாளிதொடு
கைகைக்கு நாயகம் காண்டீபன்: கல்விக்கியல் மதுரைப்
பொய்கைக்கு நாயகம் சங்கப்புலவர்: பொன்பொருளேச்
செய்கைக்கு நாயகம் சேனுபதிக்குரு தேசிகனே"

முத்தப்பர் ஒருமுறை பாதரக்குடி மடத்துக்குச் சென்றிருந்தார். அடிகள் வரவேற்று "முத்தப்பா! கஞ்சி (பழஞ்சோறு) தானே இருக்கிறது? சாப்பிடுகிறுயா?" என்றுர். "நீங்கள் உடனிருந்து ஊட்டும் அமுதத்தை உண்ணமறுப்பேனு?" என்று உரைத்து மணம் கூட்டப்பெற்ற கஞ்சியை மகிழ்வுடன் உண்டார். சாப்பாடானதும் "முத்தப்பா! கஞ்சி எப்படி யிருந்தது?" என்றுர் அடிகள். முத்தப்பர் சொன்னுர்:

"தலஞ் சேரு மூவேந்தர் புவிவளர
ஞானமுடி தரித்தோன் கீர்த்தி

*உபதேச குரு

நலஞ்சேர்ந்த தனக்கிணையான்:
வணிகேசர்க் கைங்தெழுத்தை நவிலுங் கோமான்
வளஞ்சேரும் புனவயற் பாதரக்குடிச்
சேனுபதிதன் மடத்திலுண்ணும்
பழஞ்சோற்றுக்கிணே வருமோ மற்ற
மடபதிகள் செயும் பவிசுதானே!"

இந்தப்பாட்டின் நயங்கள் சொல்லால் உணர்த்த முடியாதவை. பாடிப்பாடித்தான் உணரவேண்டும். ஒருவனைப் பற்றி நாம் சொல்லும்போது நாம் "தமிழ் வளர்ச்சிபெற நீ வாழ்கிறுய்! உனக்குஇணே நீயே" என்றுதான் சொல்வோம் தவிரவும் "மொழி வளரும்: சமயம் வளரும்: சமுதாயம் வளரும்: செடிகொடிகள் வளரும்: செந்தமிழ் வளரும்: மரம் வளரும்: மலேவளரும்: என்ற அளவிலே குறுக்கி எண்ணுகிறேம். அறுதியிடுகிறேம். முத்தப்பர் இன்னும் மேலே போகிறுர். "நாடு வளரும்; நகரம் வளரும்; மக்கள் உயரும்போது மண்ணும் உயரும்; வளரும்; நிமிரும்; ஒளிரும்; சுடரும்" என்று நூறுநூறு கருத்துக்களே நுழைக்கிறுர் முதல் அடியிலே! "தலஞ்சேரு மூவேந்தர் புவிவளர" என்ற அடியைப் பலமுறை பாடினுல்தான் அதன் நயம் தெரியும்.

## பெய்யெனப் பெய்யும் மழை........!

பாதரக்குடிசேனுபதியடிகள் முயற்சியினுல் தனவணிகர்கள் குன்றக்குடி வேலவருக்கு ஒரு வெள்ளி மயில் செய்து வைத்தார்கள். நல்லதோர் நாளிலே "வெள்ளோட்டம்" நடந்தது. முன் வரிசையில் முத்தப்பரும் சேனுபதியாரும் போகிறுர்கள். சேனுபதியார் கேட்டார் "முத்தப்பா! ஊரிலே மழையில்லேயே! நீ ஒரு பாட்டுப் பாடி மழை பெய்யச் செய்கிறுயா?" என்று. "ஆகட்டும், தெற்கு வீதியில் மடத்துக்குப் போனதும் தெய்வத்தை (சுவாமி) இறக்கிவையுங்கள்: நான் பாடுகிறேன்: இறை யருள் மழையைப் பெய்விக்கும்" என்றுர் முத்தப்பர். நள்ளிரவு நேரம். வானம் மீன் பூத்துக் கிடக்கிறது. மடத்துக்கு வந்ததும் "பாடு" என்று அடிகள் கூறமு த்தப்பர் பாடினுர்:

" அள்ளி *நிதியங்கொடுக்கும் புனல்வயற்
சேனபதி என்னையன் குன்றை
வள்ளி மணவாளனுக்கு வெள்ளிமயில்
செய்துவைத்த மகிமை பாரீர் !
வெள்ளி யறியாமல் மழை பெய்கிறதே
என்றமொழி மெய்தான் : வெள்ளிப்
புள்ளி மயிலேறி முருகன பவனிவரக்
கண்டு பொழிந்தவாறே ! "

பாட்டு முடியவில்லை. அதற்குள்ளேயே—மீன் பூத்தது பூத்தபடியிருக்க—மழை "சோ" வென்று கொட்டுகிறது! நெடுநேரமாகியும் நிற்கவில்லை. மனம் மகிழ்ந்த சேனபதி "போதும்; முத்தப்பா! நிறுத்திவிடு" என்றார். "பெய் யெனப் பெய்யு மழை" என்ற குறளுக்கு இலக்கியம் தந்த முத்தப்பர் "நில்லென நிற்கும் மழை" என்ற குறளையும் ஏற்படுத்திவிட்டார். மழை பெய்யப் பாடிய வள்ளல் மழையை நிறுத்தவும் பாடினர் :

" வந்துமழை பொழியும்வானே ! வெஞ்சூர் தடிந்த
கந்தர்திருவிழாக் காலத்தில்—தொந்தரையாய்
நீர்த்துளியை ஊற்றிவிடல் நேர்த்தியல : மாற்றிவிடு !
கீர்த்திவரும் : நாட்டன்மொழி கேள் ! "

பாட்டும் நின்றது; மழையும் நின்றது! வானத்தைப் பார்த்து என்ன உரமாகக் கட்டளையிடுகிறார்? "அருளாளன் வாக்குக்கு அணையில்லை" என்பதை இங்கே காண்கிறோம்.

## சிக்கலிலே செய்த செயல்

ஒருமுறை சேனபதியாரும் முத்தப்பரும் கோயிலூர் முத்துராமலிங்க இறைவரும் †சிக்கல் திருவிழாவுக்குச் சென்றிருந்தார்கள். மடத்தில் தங்கியிருந்தபோது நடுநிசியிலே உறக்கம் வரவில்லை. பேச்சு வளர்ந்தது. பெருமழை பெய்துகொண்டிருந்தது. இறைவர் அடிக்கடி வெற்றிலை பாக்குப் போட்டுக்கொள்கிறவர். இருந்த வெற்றிலை தீர்ந்து

* நிதியம் = திருநீறு (செல்வம்).

† சிக்கல் = ஒரு புகழ் பெற்ற சுப்ரமணியஸ்தலம்.

விட்டது. என்ன செய்வது? "முத்தப்பா! வடிவேலன் மேல் ஒரு பாட்டுப்பாடி வெற்றிலேயும் பாக்கும் வரவழைத் துத்தா" என்ருர். பாடினர் முத்தப்பர் :—

"குத்துவார் ; வெட்டுவார் ; கோடிபெறுவார் நின்பால்
பத்தல்ல ; எட்டல்ல ; பஞ்சமில்லே—இத்தனே தான்
வெற்றிலேயும் பாக்கும் விரும்பினேன் ; சிக்கலின்கண்
உற்றிருக்கும் வேலா உதவு !"

பாட்டுமுடியும்போது கதவு தட்டும் ஓசை கேட்டது. திறந் ததும் ஒரு சிறுபெண் கோயில்தட்டில் வெற்றிலே, பாக்கு, சுண்ணும்பு, (சுண்ணம்) புகையிலே, கத்தக்காம்பு முதலிய வைகளே வைத்துக்கொண்டு நின்ருள். "குருக்கள் ஐயா கொடுக்கச் சொன்னுர்" என்று சொல்லி முத்தப்பர் கையிலே தட்டைக்கொடுத்து விட்டு மறைந்தாள். அன்று இரவே குருக்கள் கனவில் "கோயில் தட்டு மடத்திலே முத்தப்ப னிடம் இருக்கிறது. காலேயில் வாங்கிக்கொள்" என்ற வாக்குக்கேட்டது. கோயிலூர் ஆண்டவரும் சேனுபதியடி களும் முத்தப்பரது அருள் நலத்தைப் பெரிதும் பாராட்டிக் கொண்டிருந்தார்கள். முத்தப்பரோ "இறைவன்—தன் செயலேச் செய்தான்" என்று கூறினர். எல்லோரும் சுவை மிக்க அவ்வெற்றிலேயைப் போட்டுக் கொண்டார்கள்.

காலேயிலே மடத்து வாசலில் ஒரே கூட்டம். குருக்கள் கலக்கிய கலக்கிலே சிக்கல் முழுவதும்—எங்குபார்த்தாலும் "முத்தப்ப செட்டியார். முத்தப்ப செட்டியார்" என்ற பேச்சுத்தான் பரவிக்கொண்டிருந்தது!

வரிசை பெற்ற மகிழ்ச்சி........!

வேலவன் தன் வேண்டுதலே நிறைவேற்றிய அருமையை எண்ணியெண்ணி மனம் நெகிழ்ந்த முத்தப்பர் காலேவழிபாட் டின் போது பின்வரும் பாடலேப்பாடிப் பணிந்தார்!

"*அவ்வைக்கும் அந்த அருணகிரியார்க்கும்
செவ்வையாய்ப் பாடும் திற மறிந்தே—†நவ்வைக்

*அவ்வை = ஔவை.
†நவ்வைக்கனி = நாவற்பழம்.

கனியும் கவியும் கலந்தளித்தவாறே
நனியெனக் கீதீந்தவகை நன்று!"

## நோய் தீர்(ந்)த்த முத்தப்பர்

நாற்பதாவது ஆண்டிலே முத்தப்பரை மேக நோய் அணுகியது. செங்கரும்பு போன்ற தீஞ்சுவை மிக்க பாடல்களை வெள்ளமெனப் பொழிந்த முத்தப்பரது திருமேனியிலே மேக நோய் தனது முத்திரையைப் பரப்பத் தொடங்கியது. நோயின்திறம் நன்குணர்ந்த முத்தப்பர் *கீரணிப்பட்டிக்குப் போய் முத்துமாரியம்மன் †திருமுன்னே "நீயே சரணமம்மா! இந்த நெடுநோயைத்—தாயே! தவிர்த்து அருள் தருவாய்!" என்று உறுதிப் பாட்டோடு உரைத்து உண்ணு நோன்பு இருந்தார்.

இன்று நாட்டிலே எடுத்ததற்கெல்லாம் உண்ணு நோன்பு தான்! ஆனால் அன்று இதைப்பற்றி யாருக்கும் தெரியாது. தெய்வ சக்தியும் உண்ணு நோன்புமே நோயைத் தீர்க்கும் என்ற நம்பிக்கை முத்தப்பருக்கு இருந்தது. அதை அவர் செயலாக்கிக்காட்டினார். மூன்று நாளாயிற்று. உடல் துவண்டது. மூன்றும் நாள் இரவிலே அன்னை கனவிலே தோன்றி "முத்தப்பா! கண்டர மாணிக்கத்தை யடுத்த (கொங்கராத்தி) நடுவாற்றுமருதம் பிள்ளையார் கோயிலுக்குப் போய்ப் பத்து நாள் நோன்பிருந்தால் நோய் தீர்ந்து சுகம் எய்தும்" என்றுரைத்தாள். கனவு தந்த அன்னையை முத்தப்பர் பாடிப்பரவினார் :—

## முத்துமாரியம்மன்மேல் தோத்திரப்பாடல்கள்

"பூதலம் தனையுண்டு தேவகி குமாரராய்ப்
பூதகிதன் னுயிரையுண்டு
பொரவந்த மதகரிக் கொம்பையும் ஒடித்துவரு
புள்ளின்வாயைக் கிழித்துச்
சாதகம தாக ஒரு சக்கரத் தோடுவரு
சகட அசுரனையும் வென்று

---

* கீழச்சிவப்பட்டியிலிருந்து ஆறு மைல்.
† திருமுன் = சன்னதி.

தருவிளாங் கனிதனைக் கன்றாலே நிந்தாவின்
தலைமீதி லேஙடித்துச்
சூதுசெய் பாணாசுரன் கைகள் ஆயிரமும்துணித்து
வெள்ளானை வேந்தன்
சொற்படி வருங்கல்லின் மாரியைக் கிரியினால்
துயரற விலக்கிவைத்த
மாதவ சகோதரி! மனோன்மணி! தயாபரி!
மகதேவி! சாமிபரையே!
வாரிதிகள் புவியிலுயர் சீரணிங்ன் னகரில்வளர்
மாரி! மகமாயி! உமையே!" (1)

"வேணியரனார் வரமளிப்பதும் திகிரிகொள்
விஷ்ணுசங் காரகர்த்தா—
மேன்மை வந்ததும் வஜ்ரபாணி பொன்னாட்டுக்கு
வேந்தன்என அரசாள்வதும்—
தூணிநிறை புஷ்ப பாணத்தினால் மன்மதன்
தொல்புவியி லுள்ளோர்களும்—
சுபமான மும்மூர்த்தியும் மயங்கவே
தொடுத்தெய்யும் வல்லமைகளும்—
ஆணிமுனிவோர் ரிஷிகள் சாபமும் நிவர்த்தியும்
அருந்ததி மடந்தைகற்பும்—
அம்புலி குறைவதும் நிறைவதும் பூமிதனை
ஆதிசேஷன் தாங்கலும்—
வாணிமன திஷ்டமும் நின்மஹிமை யல்லாது
மற்றவர்களால் முடியுமோ?—
வாரிதிகள் புவியிலுயர் சீரணிஙன் னகரில்வளர்
மாரி! மகமாயி! உமையே!" (2)

"காரொத்த குழலுமதி நேரொத்த நுதலுமிரு
காண்டீப நிகர்புருவமும்—
கணையொத்த விழியும் கரும்பொத்த மொழியுமிகு
கருணைபொழி மாகுழைகளும்—
சீரொத்த குமிழ்நாசி பவளநி காதரமும்
சிப்பிமுத் தன்னநகையும்—
செய்யகமு கொத்த மிடறும் கச்சளாவிவளர்
செம்பொத்த தனபாரமும்—

ஏரொத்த காரும்வட விலையுற்ற ஆரமும்
இணையிலாச் சிறுமருங்கும்—
இளவரா வொத்த சிறுகாலு மலரடியுமென
திருவிழிகள் காணவெள்ளி—
வாரத்திலே சிங்க வாகனத்தில் நீயும்
வந்து அருள் செய்க! அம்மா!
வாரிதிகள் புவியிலுயர் கீரணிநன் னகரில்வளர்
மாரி! மகமாயி! உமையே!” (3)

‘வெள்ளிமலை யானையொரு சூதக் கனிக்காக
வேண்டிவல மாகவந்து—
விண்ணோர்கள் மண்ணோர்கள் செய்திடுங் காரியம்
வினவமுன் வந்துஅருளித்—
துள்ளிவரு மூஷிகம் தனிலேறி ஐங்கரன்
தோன்றமத கரியுமான—
தொந்திவயி றோனையும் தந்துமவ னுகவே
தோன்றிஅசு ராளைமாய்த்துப்—
புள்ளிமயி லேறிவானோர்க்கு வருதுன்பங்கள்
போக்கிவடி வேலணிந்து—
புரந்தான் செய்கையும் மறந்துவேல் விழியாள்
புனக்குற மடந்தையான—
வள்ளிமண வாளனையும் ஈன்றமாதங்கி! நின்
மஹிமையெவர் அறிவரம்மா!
வாரிதிகள் புவியிலுயர் கீரணிநன் னகரில்வளர்
மாரி! மகமாயி! உமையே!” (4)

முத்தப்பர் மனமகிழ்வுடன் நேராகக் கோங்கரத்திக்குப் போய் நவோற்று மருதம் பிள்ளையார் திருவுருவைக் கண்டு அடிபணிந்தார். நாள்தோறும் வழிபாடு செய்து நாளுக்கொரு பாடல் பாடினூர். பத்து நாட்களில் நோய் முழுவதும் தீர்ந்து உடல் நலம் பெற்றது. தெய்வத் திருவருளை வியந்து போற்றினூர், முத்தப்பர். நவோற்று மருதம் பிள்ளையார்மேல் பாடிய பத்துப் பாடல்களில் ஒன்பது பாடல்களை இங்கே பார்ப்போம்:

" பூமேவு மிதழி மாலிகை யணியுமீசன்
புத்திரனே ! சதுர்வேதன் மைத்துனனே ! சாமி !
காமேவும் ஐங்கர விநோத ! முப்புரினூற்
கர்த்தனே ! பெருச்சாளி வாகன ஒய்யார !
பாமேவும் ஔவையார் தான்கண்டு பணியும்
பாதவல்லவை யுடைச் சமேத வைபோகா !
மாமேவு மார்ப ! கருடப்பரியி லேறும்
மால்மருகனுக வந்த மருதம் பிள்ளையாரே ! " (1)

" ஆரணர்க்கும் நாரணர்க்கும் ஐமுகவர் தனக்கும்
ஆதியாய் வந்த பரஞ்சோதியே ! ஞானக்
காரணத் தினைப்புனத்தைக் காத்த வள்ளிமானைக்
கந்தனுக்கு வசப்படுத்தித் தந்த தொந்தியோனே !
தாரணிக்குள் உன்பாதம் நம்பு மடியார்கள்
சஞ்சலமெலாம் தீர்த்து நெஞ்சி லுறைவோனே !
வாரணத்தின் முகம்படைத்த வாமன சொரூபா !
வள்ளலே ! நடுவாற்று மருதம் பிள்ளையாரே ! " (2)

" அந்த மிகு கும்பினித்துரை மார் அநேகம்
அவர்களிலே பெரியதுரை அக்கினி சிற்றளவாய்
சிந்த மிகு பட்டாளம் எண்ணத் தொலையாது
ஜெயகவுரி ராஜனும் தென் சீமைத்தளமும்
இந்திரன் தென்கோடி தொண்டமான் சேனையும்
இரதகஜதுரகங்கள் பதினெண்ணுள் நின்றும்
மந்திரதம்புயமருது பாண்டியன் தன் பொருட்டால்
வந்திறங்கவிடுதிவிட்ட மருதம் பிள்ளையாரே ! " (3)

" பன்னுதமிழோங்கு திருக்கோட்டி ; திருப்புத்தூர்
பட்டமங்கலநாடு ; மிக்கவெளியாத்தூர்
பொன்னல்மிகு கோனுடு ; கானுடு ; வள்ளூர்
பூங் குன்றநாடு ; கல்வாச உயர்நாடு
தென்னேம நாடு ; ஏழூர்ப்பத்து நாடு
திருவதனை நாடு ; பாலையநாடு ; ராஜ
மன்னர்புகழ் பாகனே நாடுகண்டுகொண்ட
மாணிக்கநாடுபணி மருதம்பிள்ளையாரே ! " (4)

“சீதளி நன்னதியும்பல சிங்காரத்தோப்பும்
தேரோடும் வீதிகளும் பட்டணமும் கடையும்
ஆதவன் மண்டலமடுத்த கோட்டை கொத்தளமும்
அகிலநிறை வாவிகளும் கோவில் சிகரமுமாம்
சாதி நிறை நான்குபல; குன்றைவனமான
தனித்திருப்புத்தூர்க் கருப்பர்தாள் போற்றிமேவும்
மாது சிவகாமி திருத்தளி நாதருடனே
வடுகேசரும் புகழு மருதம் பிள்ளையாரே!” (5)

“ஏழைஎளி யோர்கள்குடி ஈடேறும் படிக்கு
இதைச்சேர்ந்த புவியிலுள்ள ஏரிகளைப் பெருக்கிக்
காளமுகில்போற் கருத்து வானை குதிபாயும்
காவேரி யாறுதனைக் காலாற்றுக்கிணக்கி
ஆழியும் கொள்ளாமல் தத்தளிக்கப்பாயும்
ஆற்றின் சங்கீத முத்தாரமலை சேரும்
வாளை திமிங்கிலம் மகரம் மல்கி விளையாடும்
மணிமுத்தா நதியில் வந்த மருதம் பிள்ளையாரே!” (6)

“புகழ்வேந்தன் திருதராட்டிரன் சுதர்க்கும்பாண்டு
புதல்வருக்கும் பகை மீறிப் புனக்கானம் புக்கு
மிகவாண்டு பதினன்கு பாண்டவர்களிருந்து
மெலிந்ததுவும் நூற்றுவர் மலிந்ததுவும் மாலோன்
சுகமான உயர் சரண மிருபாதம் சிவக்கத்
தூது நடந்ததும் சண்டை தொடர்ந்து முடிந்ததுவும்
மகமேரு ஏடாக எழுத்தாணி கோடாய்
வரிந்து பாரதமெழுது மருதம் பிள்ளையாரே!” (7)

“தேவநகராளு முத்துவிஜய ரகுநாத
சேதுபதிபெயருடைய தேவமகாராஜன்
பூவுலவு சஸிவர்ண போஜ மகாராஜன்
புகழ் முத்து வடுக ஞமகேந்த்ர மகாராஜன்
காவலன் மருது பாண்டிய போஜராஜன்
கருதிய நவாபு; கும்பினி ராஜனுடனே

---

நான்காவது பாட்டு கிழக்கிந்தியக் கம்பெனிபற்றிய செய்தி களையும் ஐந்தாவது பாட்டு வேளாளர் நாட்டுப் பிரிவு பற்றிய செய்தி களையும் கூறுகிறது. விளக்கம் “முத்தப்பர் நூல் நயத்தில்” காண்க.

மாவலவன்; புஜபலஸ்ரீ கெவுரி வல்லவனும்
மாராஜன் பணிந் தேத்து மருதம் பிள்ளையாரே!" (8)

"மேகமெனும் ரோகமது தேகத்திலாகி
மெய்பொறுக்க மாட்டாமல் "ஐயோ" என்றலறி
ஆகமிகுதுயரந்தனைப் பொறுக்க ஆற்றேன்
அத்துயரந் தீர்த்தெந்தன் மெய்ப்பிணி விலக்கித்
தேகபரிசுத்தமொடு திரேக பலமாக்கிச்
சிந்தையும் நிறைகல்வி செல்வ மெனக்கருளி
மாகமட்டும் புகழோங்கி வாழ்ந்து கொண்டமட்டும்
மால்மருகனாக வந்த மருதம் பிள்ளையாரே!" (9)

மேற்கண்ட பாடல்களிலே பல சரித்திரச் செய்திகள் கூறப்பட்டிருக்கின்றன. அவை எதிர்கால வரலாற்று நூலாசிரியர்களால் விளக்கப்படுமாக!

நோய்தீர்ந்த முத்தப்பர் அங்கிருந்து நேமம் வந்து சில நாட்கள் தங்கியிருந்து பின்னர் வீடு திரும்பினார். நாம் கதைகளிலே கேட்கிறோம் "குருடனுக்குக்கண்வந்தது" முடவனுக்குக்கால் வளர்ந்தது" என்று. இன்னும் "குட்டம் நீங்கியது. பெருநோய் நீங்கியது" என்றெல்லாம் பாட்டுக்குப் பெருமை தந்து பெருமைப் படுத்துகிறோம். இதை மெய்ப்பிப்பது போன்று நேற்று—சென்ற நூற்றாண்டில்—வாழ்ந்திருந்த முத்தப்பர் தன்னுடைய பாட்டுத் திறத்தால் தனக்கு வந்த நோயைப் போக்கிக்கொண்டார். அதுமட்டுமல்ல: பிறருக்கு வந்த நோயையும் போக்கடித்தார்.

உலகிலே மருத்துவர்கள் பிறர் நோயைப் போக்குவார்கள். ஆனால் அவர்களிற் பலருக்குத் தமக்குவரும் நோயைப் போக்கிக்கொள்ளத் தெரிவதில்லை. கைதேர்ந்த செய்யுள் மருத்துவரான முத்தப்பர் தமக்குவந்த நோயைத் தீர்த்துக் கொண்டசெய்தி யறிந்தோம். இனி பிறருக்கு வந்த பிணியையும் தீர்த்தவகையைத் தெரிந்துகொள்வோம்.

ஒருமுறை இவரும் சேனாபதி அடிகளும் *பழனிக்குச் சென்றிருந்தார்கள். அப்பொழுது †பழனியிலே வயிற்றுப்

---

*இது திருவாவினன்குடியில் மலைமேல் உள்ளது.
†இங்கேதான் சித்தரான போகர் வாழ்ந்திருந்தார்.

போக்கு நோய் பரவியிருந்தது. பழனியாண்டவனை வழி படுவதற்குச் சென்ற சேனுபதியடிகளையும் வயிற்றுப்போக்கு வளைந்துகொண்டது. கூடவந்திருந்த அடியவர்கள் துடித் தார்கள். சேனுபதியாரோ செயலிழந்து படுத்திருந்தார்.

உடனிருந்த முத்தப்பர் "பதறுதீர்கள்! குணத்துக்கு வந்துவிடும்" என்று சொல்லிக் குன்றக்குடி முருகன் பேரில் பத்துப்பாடல்களும் பழனியாண்டவன் பேரில் பத்துப் பாடல் களும் ஆக இருபது பாடல்கள் பாடி இறைவனை வணங்கித் திருநீறிட்டார். ஞானசம்பந்தனுடைய திருநீறு பட்ட பொழுது எப்படிக் கூன்பாண்டியனுனவன் வெப்பும் கூனும் ஒருபடியாகத்தீர்ந்து "நின்றசீர் நெடுமாறன்" ஆயினனே அதேபோல் முத்தப்பரின் திருநீறு பட்டதும் சேனுபதி யாரைப் பிடித்திருந்த நோயும் தீர்ந்தது. முன்பின் ஏற்பட்ட அலுப்பும் தொலைந்தது. உற்சாகத்துடன் எழுந்த சேனுபதி யடிகள் முத்தப்பரைக் கட்டித்தழுவிப்பாராட்டினர். முத் தப்பர் அன்றுபாடிய பாடல்களில் பின்வரும் ஆறு பாடல் களைத் தவிர மற்றவைகளைக் காலவெள்ளம் போக்கடித்து விட்டது.

### குன்றக்குடி முருகன்பேரில்........!

"மானுடியங்கையினில் வைத்தபின் தந்தைகொடு
*மறலியலறிட வுதைத்தே
மார்க்கண்டன்மேல் தயவுவைத்து முன்பதினறு
வயதுங் கொடுக்கவிலையா ?
கானுறு குழலியுன் தாயன்பு புனைகின்ற
கவிராஜ பண்டிதன்பின்
காசிமட்டும் சென்று அன்னம் சமைத்துக்
கனிந்தளித்திடவில்லையா ?
மீனுனவடிவனுன் மாமனுன் கவிஞன்மொழி
மீருதவன் படுக்க
†மின்பாய் சுருட்டிச் சுமந்தவன் பின்னே
விரைந்து சென்றிட வில்லையா ?

---

*மறலி—கூற்றுவன் (எமன்) †காஞ்சிபுரத்துப் புலவன் கணி கண்ணனுக்காகப் பாம்பைச் சுருட்டிக்கொண்டு சென்ருர், திருமால்

சேனபதிக்குரு சிகாமணிக் கருளுநீ
செய்குவது மாபாரமா?
திரண்டமணிமுகில் மேலடர்ந்த கொடுமுடிசூழ்
*சிகண்டிமலை முருகேசனே! (1)

"ஏரிலகு தாடகையை மாரீசனைக்கானை
இனியதிரிசிரனை விண்மீ
திருந்திடுகபந்தனை விராதனை அயோமுகியை
எதிராத ஜெயவாலியைக்
கூரிலகுவச்சிரஎயிற்றனை நிகும்பனைக்
கும்பனொடு அதிகாயனைக்
கும்பகர்ணனை விகட ஜம்புமாலியை விருது
கொண்ட இந்திர ஜெயித்தைத்
தாரிலகு புயன் இராவணனைத் தடிந்துகோ
தண்டமொரு கையிலேந்தும்
தசாத குமார ரகுராகவன் எனவந்தவ
தரித்திடு முகுந்தன் மருகா!
†சீரிலகு சங்கநிதி சேனபதிக்குரு
சிகாமணிக் கருள்புரிகுவாய்!
திரண்டமணி முகில்மேலடர்ந்த கொடுமுடிசூழ்
சிகண்டிமலை முருகேசனே!" (2)

பழனியாண்டவன்பேரில்........!

"ஞாலமீரேழுலகு இருநூற்று இருபத்து
நான்கு புவனப்பரப்பும்
நாடறிய ஆயிரத்தெட்டண்ட முங்கெடி
நடத்தி யொரு குடை நிழற்கீழ்
நீலமணி முகில் தவழ நின்ற கிரவுஞ்சகிரி
நிட்டையிற் புடை நெருங்க
நிறைவீரமாமயேந்திர புரியில் நவமணி
நிறைத்த அரியாசனத்தில்

---

*சிகண்டிமலை = மயில்மலை (குன்றக்குடி)

†சங்கநிதி = பொன்னுட்டரசன் தேவேந்திரனின் செல்வத்தில் ஒன்று(சங்கச் செல்வம்). மற்றொன்று பதுமநிதி (சக்கரச் செல்வம்) ராமகதை முழுதும் இப்பாடலில் கூறப்படுகிறது.

கோலமுடி சூடிநிலை பெற்றிருந்ததிககன
கொடுமை புரி சூரபத்மன்
குலமுமவனுடலும் நெறநெறெனக்கிழித்துமிரு
கூறிட்டவடிவேலவா!
*வாலசந்திரனை சேனாபதிக்குரு
மனோரதப்படி அருள்செய்வாய்!
வளர்திருப்பழனி மலை மிசையினிற்குலவுசர
வண பவக்குமரகுருவே!" (3)

"கதிதருஞ் சரவணநதிக்குட் படிந்து தப
காலத்தில் நியமமாகக்
†காயத்திரி நெட்டுருக்கொண்டு நிறைவேற்றிக்
கருத்திற் ‡சடாக்ஷரத்தைத்
துதிசெய்து மூன்றுதரம் உனது பொன்னாலயம்
சுற்றிவலமாக வந்து
§துஜகம்பமதில் நின்று தியானமுஞ் செய்துபின்
தொழுது நின் சன்னிதியினில்
அதிகதயவோடுதரு விபூதியினை வாங்கியிரு
அங்கையால் நெற்றிமீதே
யணிந்துலகில் நீடூழிமார்க்கண்டனெனவளரும்
அழகுலெட்சுமி விலாஸன்
பதிவதனி சேனாபதிக்குரு சிகாமணி
மனோரதப்படியருள் செய்வாய்!
வளர்திருப்பழனி மலை மிசையினிற் குலவுசர
வணபவக் குமர குருவே!" (4)

"கலிகால மீதினிற் கண்கண்ட தெய்வ நீ!
கருதுமடியார்கள் வினவும்
$ கருமநிறை வேறவும் தயவுசெய் யாததென்ன
காரணம்? சுவாமிமனது

---

*வாலசந்திரன் = இளந்திங்கள் இந்தபபாடலில் கந்தபுராணக் கதை கூறப்பெறுகிறது.

†காயத்திரி = ஒரு வடமொழி மந்திரம். காலையில் ஜெபித்தற்குரியது.

‡சடாக்ஷரம் = ஆறெழுத்து. §துஜகம்பம் = கொடிமரம்.

$ கருமம் = செயல்கள்.

வலிதான கல்லோ? இரும்போ? கனங்கொண்ட
வயிரமோ? தானிரங்கா
வகையேது சித்தர் திரும்பினு லிப்போது
மலையுமனுவா குமுலகில்
புலியின்முன் நரி ஊஞ்சலாடுமோ? வினையெலாம்
பொறியிட்ட பஞ்சுபோலாம்
பொய்யரிட மணுகாத மெய்யனே! எவருநின்
புதுமையள விடலாகுமோ?
மலிவான புகழ்பெற்ற சேனுபதிக்குரு
மனோரதப்படி யருள் செய்வாய்!
வளர்திருப் பழனிமலை மிசையினிற் குலவுசர
வணபவக் குமர குருவே!" (5)

* பொன்பூத்த ரத்னமுடி புனைகின்ற சிகரமும்
புண்டரத் ‡திலக நுதலும்
பொழிகருணை விழியும் நவமணிமுருகு காதினிற்
பூண்டகுண்டல வடிவமும்
தென்பூத்த சண்முகக் கருணையும் பவளவாய்
சிறுதாள முறுபல் நிறையும்
ஜெய §நீபமாலை யாபரண மணிமார்பமும்
திருநீறுகொண்ட புயமும்
மின்பூத்த மிடுகுகங் கணமிட்ட கையினில்
வேலுந்துலங்க மயில்மேல்
மேவு சிற்றிடையிற் சதங்கையும் பாதார
விந்தமுங் காண வந்தேன்!
மன்பூத்த சிவசமய சேனுபதிக் குரு
மனோரதப்படி யருள் செய்வாய்!
வளர்திருப் பழனிமலை மிசையினிற் குலவுசர
வணபவக் குமர குருவே!" (6)

---

* முழுவதும் நவமணிகளால் ஆக்கப்பெற்று இடையிடையே பொன்னிழைத்த மணிமுடி. (இந்த அடி பெரு நயம் வாய்ந்தது).

‡ திலக நுதல் = பொட்டிட்ட நெற்றி.

§ நீபமாலை = வேப்பம்பூ மாலை.

## 4. புலியைவென்ற போர்க்களிறு

பழனிக்குச் செல்லும் வழியிலே "எரசு நகரம்," என்று ஓர் ஊருண்டு. அங்கே ஒருமுறை முத்தப்பர் சென்றிருந்தார். அந்த ஊர் ஒரு குறுநில ஆட்சிக்குட்பட்டது. அதன் தலைவர் (ஜமீன்தார்) பெயர் இம்முடிலிங்கேந்திரர். (இவருக்குநாகேந்திரர் என்ற மறுபெயரும் வழங்கியது) அவர் 'வெண்பாப்புலி வீர கவிராயரைப் பெரிதும் ஆதரித்து வந்தார். அவர்மேல் வெண்பாப்புலி ஒருபாடல் பாட எண்ணிப் பின்வரும் பாதிப் பாடலை எழுதியிருந்தார். கீழ்க்கண்ட பாட்டு எரசுநகரில் பல இடங்களில் எழுதப்பட்டிருந்தது. முத்தப்பர்படித்துப் பார்த்தார் :

" இம்முடிலிங்கேந்திர துரைக்கேற்கநடந்தோர்களெல்லாம்
தம்முடி கொண்டே யுலகிற்றாம் வாழ்வார் "

முதப்பருக்கு ஒரு நினைவுவந்தது " ஒருகாலத்தில் இந்த எரசு நகரக் குறுநிலம் (ஜமீன்) எத்தனை செழிப்பாக இருந்தது ? இம்முடிலிங்கேந்திரன் " தோப்பவீரன் " என்ற ஏழையைக் கொன்றதாலல்லவா இந்த நிலையிலேயிருக்கிறான் ? வெண்பாப்புலியின் அறிவு இவனைப்புகழுகிறது என்றால் பணத் தாசையல்லவா காரணம் ? " என்று எண்ணமிட்டு அதனடியில் —சும்மாவோ ?
தப்பில் தலையிழப்பர் : சாட்சியொன்று வேண்டுமெனில்
அப்பனெனும் தொப்பவீரனும் "

என்று பாட்டை முடித்தெழுதினார். கீழே " இதை எழுதினேன் : அழகப்ப சேட்டி முத்தப்பன் கீழச்சிவப்பட்டி " என்று கையெழுத்திட்டுப் பழனிபோய் ஊர்திரும்பினார். நினைத்ததை எழுதிவிட்டாரே தவிர " வெண்பாப்புலி பெரிய புலவராச்சே ! அறம் (வசை) பாடிவிட்டால் கெடுதிவிளையுமே " என்று எண்ணியவராய் வீட்டிலே தகவல்சொல்லி விட்டு, வெண்பாப்புலியின் உறவினரும் தமக்குமிகவும் வேண்டியநண்பருமான மிதலைப்பட்டி வேலுக்கவிராயர் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்ததும் இம்முடிலிங்கேந்திரருக்கு

அடியிற்கண்ட சீட்டுக்கவியையும் எழுதியனுப்பினர். புலவர் களின் அடிப்படையே துணிவுதானே!

“பத்தலார்க் குதவு பதிஎரசு மேவும்
பாக்கியனே! இம்முடிலிங்கேந்திரா! நின்
தத்துவாம் பரிகளெங்கே? கிரீடமெங்கே?
தண்டிகை பல்லக்குமெங்கே? தளந்தானெங்கே?
மெத்தை கொண்டவீடுமெங்கே? அதனுள்மேவும்
மேலான பவிசொடு பண்டாரமெங்கே?
சுத்த வீரங்களெங்கே சும்மாபோச்சே?
தொப்பை வீரனை வதைத்த தோஷத்தாலே!”

இது பார்த்த இம்முடிலிங்கேந்திரர் வேண்பாப்புலிக்குச் செய்தியனுப்பினர். வேண்பாப்புலியார் வந்தார். “பதறு தீர்கள்! என்னை எதிர்த்தெழுதிய முத்தப்பனை அடிமை கொண்டுவருகிறேன்” என்று வஞ்சினம் கூறிப்பயணப்பட் டார். அந்த வேண்பாப்புலி யாரென்று பார்ப்போம்.

## வெண்பாப்புலி வரலாறு

வேண்பாப்புலி வீரகவிராயர் முத்தப்பரைக் காட்டிலும் பத்து ஆண்டுகள் முதியவர். பண்டாரமரபினர். மதுரை மாவட்டம் (ஜில்லா) மேலூர்வட்டம் (தாலூகா) மணப்பச்சேரி கிராமத்தவர். இவர் பெண்ணெடுத்த ஊர் மிதுலேப்பட்டி. அழகியசிற்றம்பலக் கவிராயரைச் சேர்ந்த வேலுக்கவிராயர் இவருக்கு “மருமகன்” முறைக்காரர். வேண்பாப்புலி அவர்காலத்துப் புலவர்களையெல்லாம் வென்று (பலரை அடிமைகொண்டு) புறங்கண்டு “வெண்பாப்புலி” (வெண் பாப்பாடுவதில் வல்லவர்) என்ற பட்டத்தைப் பெற்றுத் தங்கக்கடயம், தண்டிகை ஆகிய விருதுகளுடன் வாழ்ந் திருந்தார்.

ஔவை சொன்னள், “புலவர்க்கு வெண்பாப்புலி” என்று. அத்தகைய வெண்பாப் பாடுவதிலே ஒப்பாரு மிக் காரு மற்றவராக வேண்பாப்புலி விளங்கினர். புதுக்கோட்டை யரசரும் சேது மன்னரும் நத்தம் சிற்றரசரும் இம்முடி லிங்கேந்திரரும் இன்னும் பலரும் இவரை யாதரித்துப் பரிசில்

தந்தவர்கள். இவரைப்பற்றித் *"தனிச் செய்யுட் சிந்தாமணி" என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.

"இவர் (வெண்பாப்புலி) மதுரையைச் சேர்ந்த மேலூர் வட்டத்தில் மணப்பச்சேரிக் கிராமத்தில் வசித்திருந்த சைவப் பண்டார மரபினர். இவரது இயற்பெயர் தெரிந்திலது. வெண்பாப் பாடுதலில் திறமையுடையவராயிருந்தது பற்றி "வெண்பாப்புலி" எனும் பெயர் இவருக்கு வந்தது போலும். இவரைச் சிவகங்கை, புதுக்கோட்டை, ராமநாதபுரம், நத்தம் முதலிய சமஸ்தானாதிபதிகள் ஆதரித்து வந்தனர். இவர் காலம் சென்ற 100 வருஷங்களுக்கு உட்பட்டதே. இவர் சந்ததியார்கள் தற்காலத்திலும் செவ்வூர், மிதிலைப்பட்டி என்னும் ஊர்களிலிருக்கிறார்கள்."

வெண்பாப்புலி †வசை பாடுவதில் வல்லவர். திட்டமான வாக்குப் பலிதம் உடையவர். சினம் (கோபம்) வந்தால் யாராலும் மாற்ற முடியாது. இத்தகைய வெண்பாப்புலியார் தான் முத்தப்பரோடு வாதாடித் தோல்வி யடைவதற்காக விருதுகளோடு கிளம்பினார்.

"வெண்பாப்புலியார் வாழ்க!" என்ற கட்டியத்துடன் பல்லக்கு சிவப்பட்டியில் முத்தப்பரின் வீட்டு வாசலில் நின்றது. "எங்கே முத்தப்பன்" என்றார் வெண்பாப் புலி. "செட்டியார் மிதிலைப்பட்டி வேலுக் கவிராயர் வீட்டுக்குப் போயிருக்கிறார்கள்" என்று தகவல் வந்ததும் பல்லக்கு மிதிலைப்பட்டியை நோக்கித் திரும்பியது. அந்தக் காலத்தில் ஒவ்வொரு கவிராயர் வீட்டிலும் கட்டியக்காரன் வைத்திருப்பார்கள். வேலுக் கவிராயர் வீடு வந்ததும் வெண்பாப்புலியின் கட்டியக்காரன், "புலி வருது" "புலி வருது" என்றான். உடனே முத்தப்பர் சொல்லிவைத்திருந்தபடி "புலி வந்தால் என்ன? வேலிருக்குது குத்த" என்று சொல்லிவிட்டு "வேலிருக்குது; வேல்; வேல்" என்று கூவினான்,

---

* முறையூர் பழ. சண்முகம் செட்டியார் பொருளுதவியால் மு. ரா. கந்தசாமிக் கவிராயர் தொகுத்து வெளியிட்ட நூல்.

† வசை பாடுவது = எதையும் நிந்தித்து அறம் பாடுவது.

வேலுக் கவிராயர் வீட்டுக் கட்டியக்காரன். இதுகேட்ட வெண்பாப்புலியின் மனத்திலே "சுருக்" கென்று ஒரு தீப் பொறி சுட்டது. இறங்கி வீட்டினுள் நுழைந்தார். வேலுக் கவிராயர் வரவேற்றார்.

பேச்சுத் தொடக்கம்.

வேலு:—வாருங்கள்! மாமா வாருங்கள்! தேவரீர் தயவுவைத்து இங்கே எழுந்தருளியது ஏனோ? அத்தி பூத்தது போலிருக்கிறதே!

வெண்பா :—வேலு! பேசுவற்கு இது நேரமல்ல. மீசை துடிக்க) சிவப்பட்டி முத்தப்பன் இங்கே வந்தானோ? எங்கே அவன்? உடனே வரச்சொல்லு! பாட்டை மறுத் தெழுதிவிட்டு ஏன் மூலையிலே பதுங்குகிறான்? வரச் சொல்லு வெளியிலே!

வேலு :—பதறாதீர்கள்! மாமா. முத்தப்பன் வெளியே போயிருக்கிறான். வந்துவிடுவான். ஏன் இந்த ஆத்திரம்? முத்தப்பன் தவறான வேலைக்குப் போகமாட்டானே! அவ னோடு ஏன் வம்புக்குப் போகிறீர்கள்? அவனுக்கும் வாக்குப் பலிதம் உண்டு. நீங்கள் எடுத்ததும் அறம் பாடிவிடுவீர் களே என்று அஞ்சுகிறானே தவிர வேறில்லை. நீங்கள் சண்டையிட்டுக்கொள்வது நன்றாயில்லை. முத்தப்பனும் எனக்கு நெருங்கிய நண்பன். போனது போகட்டும். இனி யாவது ஒன்றுபடுங்கள்!

வெண்பா :—(நானும் முத்தப்பனும் சமதையாமே! இருக்கட்டும். இவனை ஒரு பாட்டுப் பாடச்சொல்லி மட்டம் தட்டுவோம் என்று எண்ணமிட்டு) சரி. வேலு! முத்தப்பன் வரும்வரையில் நாம் எதிர்ப் பாட்டுப் பாடுவோம். எங்கே எதிர்ப் பாட்டுச் சொல்லு!

"கூறிய வியாழனில் குவையில் வெங்கலம் வைத்து
இராமுப்பது முருக்கினால் விடிந்தால் வெள்ளியாமே!"

வேலு :—ஏன் மாமா! நமக்குள்ளேயும் போட்டியா?

வெண்பா :—போட்டியில்லை; பொழுது போக்குத்தான்.

வேலுக் கவிராயர் பாடாமலிருக்கவே மாடியிலிருந்த முத்தப்பர் மேலே யிருந்தபடியே பாடினார்:

"ஆதித்த ஞாயிறில் ஐந்தாறு காஞ்சிரங்காய் கொண்டுவந்து அவிழ்தம் பண்ணினால் விடிந்தால் திங்களாமே!"

(பாட்டிலே சரிக்குச் சரியான எதிர்ப்பு இருக்கிறது).
வெண்பா :—(திகைப்புடன்) அடே! முத்தப்பா! வெளியில் வா!

வேலு :—மாமா! நான் வரச்செய்கிறேன். ஆனால் நீங்கள் அறம் பாடுவதில்லை என்று வாக்குறுதி தரவேண்டும்.

வெண்பா :—அறம் பாடுவதில்லை. வரச்சொல்!

(முத்தப்பர் இறங்கி வருகிறார். உரையாடல் துவங்கு கிறது).

வெண்பா :—நீதான் முத்தப்பனா? நீதானே எரசு நகரத்தில் எழுதியிருந்த நம்முடைய பாட்டை முடித்தெழுதியவன்?

முத்தப்பர் :—ஆம். ஆனால் நான் ஒரு தவறையும் செய்யவில்லை. தன்னை நம்பியவனைக் கொலை செய்த இம்முடி லிங்கேந்திரனை நீங்கள் போற்றியது சரியல்ல என்று நினைத்து மறுப்பெழுதினேன். இதில் என்ன தவறு இருக்கிறது?

வெண்பா :—அப்படியா? வெண்பாப்புலி எழுதிய பாட்டை மறுத்தெழுதுவதைவிடப் பெரிய தவறுகூட இருக்கிறதா? (சிரிக்கிறார்) சரி. உட்கார்ந்துகொள்!

முத்தப்பர் :—ஒரு கொலைகாரரை எதிர்த்தெழுதியதற்காக என்னோடு வாதாட வந்தீர்களா? அப்படியானால் வேலையைத் துவங்கலாமே!

(வெண்பாப்புலியின் முகம் சுண்டுகிறது)

வெண்பா :—சரி. அத்தனை துணிச்ச லிருக்கிறதா? என் திறமை உனக்குத் தெரியுமா? நாங்கள் தலைமுறை தலைமுறையாகப் புலவர்கள். தமிழ்த் திறமை எங்கள் உரிமைச் சொத்து! நீ நேற்று வந்த புலவன். உன்னால் என்னை வெல்ல முடியுமா? வெற்றி பெறுவாயா?

முத்தப்பர் :—வெண்பாப்புலியாரே! ஔவை சொன்னபடி "எல்லார்க்கும் ஒவ்வொன் றெளிது" "முன்னே

முளைத்த காதைக் காட்டிலும் பின்னே முளைத்த கொம்பு வலியது" பரம்பரையாக நீங்கள் புலவர்கள். இருக்கட்டுமே! அதற்காக மற்றவர்கள் எல்லாம் உங்களுக்குத் தோற்க வேண்டுமா? ஔவையும் கம்பனும் மாடு மேய்ப்பவர்களிடம் தோற்கவில்லையா? வீண் பேச்சு ஏன்? உலகிலே வெற்றியும் செல்வமும் யாரிடத்திலும் நிலைத்திருப்பதில்லை. தோற்று ஓடியவன் திரும்பிவந்து தோள் தட்டியவனைத் தோற்கடிப்பது உலகில் வழிவழியாய் நிகழ்வதொன்று. காலம் பொன்னினும் அரியது. வாதாடுவதானால் நேரங்கடத்தாமல் துவங்குங்கள். சரி. இப்பொழுது நீங்கள் உங்கள் வாதத்தைத்துவங்கலாம்.

வெண்பா :—சரி. துவங்குகிறேன். ஆனால் ஒரு விதி (நிபந்தனை) இருக்கிறது. அதன்படி நீ தோற்றால் எனக்கு அடிமை. சரிதானே?

முத்தப்பர் :—சரிதான். நீங்கள் தோற்றாலோ........?

வெண்பா :—(முகம் சுளித்து) அப்படி நடக்காது. ஒரு வேளை அப்படி நேரிடுமானால் நான் உனக்கு அடிமைமாதிரி தான்.

முத்தப்பர் :—ஏன் தயக்கம்? மாதிரி என்ன? அடிமை தானே! சரி. போகட்டும். போட்டியைத் தொடங்குங்கள்.

வெண்பா :—(எதிரே தூணில் கட்டியிருந்த ஆட்டுக் கடாவைச் சுட்டிக்காட்டி) முத்தப்பா! இந்தக் கடாவின் தலை வெடிக்க ஒருவர் பாடவேண்டும். பிறகு மற்றவர் ஒட்டப் பாடவேண்டும். நீ வெட்டப் பாடுகிறாயா? ஒட்டப் பாடு கிறாயா?

வேலு :—செட்டியார்களுக்கே இரக்கம் மிகுதி. தவிர வும் ஒட்டப் பாடுவதுதான் திறமையானது. ஆகவே மாமா! நீங்கள் வெட்டப் பாடுங்கள். முத்தப்பன் ஒட்டப் பாடட்டும். சரிதானே?

முத்தப்பர் :—சரி. வெண்பாப்புலியார் பாடட்டும்.

வெண்பாப்புலி கலைமகளை வணங்கி ஒரு ஓலையில் பின் வரும் பாட்டை எழுதிக் கடாவின் தலையில் வைத்தார். கடா தலை வெடித்துக் கதறுகிறது. பின்வருவது வெண்பாப்புலி யின் பாட்டு :

"எற்கவிக்குநேரே எதிர்க்கவியும் சொல்லுதற்கோர்
பொற்கவியு முண்டோ விப்பூவுலகில் ?—நற்கவிசொல்
வேலுக் கவிராயர் வீட்டுக் கடாத்தலையே !
சாலஇரு துண்டாவாய் தான்"

முத்தப்பர் கண்ணீர் ஆருகப் பெருக இறைவனை நினைந்து அடியிற் கண்ட பாடலை எழுதிக் கடாவின் தலைப் பிளவிலே வைத்துத் திருநீறிட்டதும் தலைப் பிளவு சேர்ந்துவிட்டது. ஆட்டுக் கடா துள்ளியெழுந்து உடலைக் குலுக்கியது.

"தலையதுபடித்த வெண்பாக்கவிப்புலி கவியைக் கேட்டுத்
தலையது வெடிப்புண் டாடுதவிக்கிற தந்தோ !—முன்போல்
நிலையது பொருந்தவென்று நிகழ்த்தினேன் முத்தப்பன்யான்
உலகிலுள்ளோர்கள் காண்பீர் ! உமையவள் சுதன்காப்
[பாமே !"

(பாட்டைப் பல முறை பாடினல் அதன் உருக்கம் தெரியும்)

மயக்கம் தெளிந்த ஆட்டுக் கடா பழி தீர்த்துக்கொள்ள நினைத்ததுபோல வெண்பாப்புலியின்மேல் மூர்க்கமாகப் பாய்ந்தது. அவர் அஞ்சி விலகியோடினர். பணியாள் ஆட்டைப் பிடித்துக் கட்டினன். மூவரும் உட்கார்ந்தார்கள்.

வெண்பா :—(தன் கையிலணிந்திருந்த தங்கக் கடயத்தைக் கழற்றி) முத்தப்பா ! நான் தோற்றேன். உனக்கு நான் அடிமை. முத்தப்பனல்ல நீ ! என்னைப் பெற்றப்பன் (பெத்தப்பன்) இந்தா ! நான் பெற்ற தங்கக் கடயம்.

வேலு :—என் மாமா ! ஒரேயடியாய்த் தணிந்துவிட்டீர்களே !

(முத்தப்பரும் வெண்பாப் புலியும் சிரிக்கிருர்கள்.)

முத்தப்பர் :—நீங்கள் எனக்குத் தோற்றதுகூடத் தேவலை. ஆனல் ஆட்டைக் கண்டு கூட அஞ்சினீர்களே ! அதுதான் வேடிக்கை !

"பாட்டுக்குப் புலிபயந்து பதுங்கியதும் போதாமல்
ஆட்டுக்கும் புலிபயந்தால் ஆர்தாம் நகையார்கள் ?"

வேலு :—மாமா! நான் பாட்டை முடிக்கிறேன். பாருங்கள்!

“காட்டுப் புலியதுபோல் கவிபுகலும் நம்மிடத்தோர்
வீட்டுப் புலியானார் : வெண்பாப் புலியானார்”

வெண்பா :—சரி. முத்தப்பா! கடயத்தையும் என்னையும் ஏற்றுக்கொள்ள ஏன் மறுக்கிறாய்? ஏற்பதுதான் முறை.

முத்தப்பர் :—வெண்பாப்புலியாரே! உம்முடைய நிலை என்ன? மேதை என்ன? சிறந்த புலவரான உம்மை அடிமைகொள்ளுவதா? மனிதனை மனிதன் அடிமைகொள்ள என்ன உரிமை இருக்கிறது? என்னை வேண்டி உங்களுக்கு அடிமையான புலவர்களையெல்லாம் விட்டுவிட்டால் நான் பெரு மகிழ்ச்சி யடைவேன். இதுதான் நான் உங்களிடம் வேண்டுவது.

வெண்பா :—(கண்ணிலே இன்ப நீர் ததும்ப) முத்தப்பா! நீ வயதிலே எனக்கு இளையவன். ஆனால் அறிவிலும் பெருந் தன்மையிலும் என்னை மிஞ்சியவனாகிவிட்டாய்! உனக்கு இன்னா செய்யவிருந்த என்னை உனது நன்னயத்தால் ஒறுத்து விட்டாய்! “இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்” என்ற குறளைச் சொல்லளவிலே கேட்டிருந்தேன். இன்று நீ அதைச் செயலளவிலே மெய்ப் பித்துக் காட்டினாய்! கபிலர் போன்ற பேரறிவு படைத்தவனே! நக்கீரன் என்ற பெரும் புலவன் தனது பாவலிமையால் ஆயிரம் பேரைப் பேயின் வாய்ப் பெருஞ் சிறையி லிருந்து தப்புவித்தான். நீயோ என் கையிலகப்பட்ட பலரை விடுவித்தாய்! உனது பெருந்தன்மைக்கு அளவுதானில்லையா? பலரை அடிமைகொண்ட என்னைக்கூட நீ அடிமை கொள்ளாது விடுகிறாய்! நான் என்னிடத்தில் அகப்பட்டவர்களை—அதுவும் உன் பொருட்டாக—விடுகிறேன். ஆனால் ஐயோ! உன் பெருந்தன்மையால் நீ என்னை மீளாச் சிறையில் அடைத்துவிட்டாய்! “நீ நீடூழி வாழ்க” என்று வாழ்த்த நான் யார்? உனது தெய்வமான “செட்டி முருகன்” உனக்கு வற்றாத செல்வமும் வளர்வழியா வாழ்க்கையும் தருவானாக! நின் புகழ் வானிலும் மலர்வதாக! வளர்ந்து சிறப்பதாக!”

கண்ணீர் ஆறாக ஓட முத்தப்பரைக் கட்டித் தழுவுகிறார். முத்தப்பரும் மனமொத்துத் தேம்புகிறார். குகனும் பரதனும் கண்டு தழுவிய காட்சியைக் கவிதையிலே காட்டிய கம்பன் இருந்திருந்தால் எப்படி இந்தக் காட்சியை நயம்படக் கூறுவானோ? "அண்ணலும் நோக்கி அவளும் நோக்கிய" நிலையிலே வெண்பாப்புலியும் முத்தப்பரும் தேம்பித் தேம்பி யழுதார்கள். உள்ளத்தால் ஒத்த இருவரும் விசித்து விசித்து அழுத காட்சி அறிவும் ஆற்றலும் ஒன்றுபட்டுத் தமிழன்னையின் இன்றைய அவல நிலை குறித்து அழுவதைப்போன்றிருந்தது.

ஒருவாறு பரவச நிலையிலிருந்து மீண்ட வேலுக் கவிராயர் நடந்தவைகளை எண்ணி—முத்தப்பரது வாக்காற்றலை மனத்தி லெண்ணிச்—செயல் மறந்து முத்தப்பரைப் புகழ்ப் பாடல்கள் பாடி வாழ்த்தினர்.

உடனே வெண்பாப்புலியும் இன்ப வெள்ளத் தாழ்ந்து

"கற்றவர் கல்விக்கு உரையாணி! நீ தங்கக் கட்டி! நின்னைப்
பெற்றவளே செல்வப் பேறுள்ள தாய்! நின் பிதா முன் [செய்த
நற்றவமே தவம்! நாட்டார் வணிகர்க்கோர் ரத்தினம் நீ!
கொற்றவரும் புகழ் முத்தப்ப பூப! குண ரத்னமே!"

என்ற பாடலைப் பாடி முத்தப்பரை வாழ்த்தினர். சிறை தீர்ந்த புலவர்களோ "சிறை மீட்ட செல்வன்" முததப்பர் மேல் அளவற்ற பாடல்களைப் பாடியதுடன் "புலமைச் சிறையைத் தீர்த்தவனே! பொன்னர் மணியே! முத்தப்பா!—வலமை சிறந்தாய் வாழியவே! வாழ்வொடு வளமுற வாழியவே!" என்று "வாய் தந்த சொல்லால்" வாழ்த்துரைத்தனர். "முத்தப்பருக்கு வெற்றி!" என்ற முழக்கம் வானைப் பிளந்து ஒலித்தது.

வெண்பாப்புலியை வெற்றி கொண்டதிலிருந்து முத்தப்பர் புலவர் தலைவரானர். புகழும் பெயரும் அவரைத் தேடி வந்தடைந்தன. மன்னர் பலரும் முத்தப்பருக்கு வரிசை நல்கினர். அன்றுமுதல் வெண்பாப் புலியும் முத்தப்பரும் இணைபிரியாது வழ்ந்தனர். அவர்கள் நட்பு "தமிழ் நட்பு"

க்கு இலக்கியமாய்த் திகழ்ந்தது. முத்தப்பருக்கு வெற்றி தந்த பெரும் புலமையும் அருள் வாக்கும் நமக்குச் சலியாத நல்வாழ்வைத் தந்து சிறப்பனவாக!

## 5. மழையீந்த வான் பொருள்

"மானீன்ற கன்றோ? மழையீந்த வான் பொருளோ?" என்று செட்டிமார் பெண்கள் தாலாட்டுப் படிப்பார்கள். முத்தப்பர் உண்மையிலேயே மழையீந்த வான் பொருள்! மழை கொடுத்த வள்ளல்! குன்றக்குடியிலே மழை பெய்யவும் நிறுத்தவும் பாடிய முத்தப்பர் "ஏழை யெளியோர்கள் குடி ஈடேறும்படிக்கு" என்றதன்வாக்குப்படி பல முறை மழைப் பாட்டுப்பாடி மழை பெய்யச் செய்து மக்களின் உழைப்புக் குப் பலன் கிடைக்கச் செய்தார்.

உலகிலே "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட் டெல்லார்க்கும் பெய்யும் மழை" என்றும் "புண்ணியவான் பெய்யென்றால் மழை பெய்யும்" என்றும் மொழித் தொடர் கள் வழங்கப்பெறுகின்றன. இன்னும் "நடக்காத ஒன்று நடந்தால் மழை பெய்யும்" என்றும் "அத்தி பூத்தால் ஆறு பெருகிவிடும்" என்றும் நம்புகிறோம். மழை பற்றிய விஞ்ஞானக் கருத்துக்கள் வேறாக இருப்பினும் மக்களின் நல்லெண்ணத்துக்கும் செயலுக்கும் தக்கபடியே மழை பெய்யும் என்றே பலரும் கருதுகிறார்கள்.

ஒரு முறை சுற்று வட்டகை முழுவதும் மழையில்லை. ஏழைகள் புடைசூழ *நேமேரம் மலையரசி கோயிலுக்கு முத்தப் பர் சென்று பின்வரும் பாடலைப் பாடினர். மறுநாளே பெரு மழை பெய்து நாடு வளம் பெற்றது.

### மழை விண்ணப்பம்.

"மேதினி விளங்கு திருபாலி! அப்பாலி! நீலிமலி! திரிசூலி! கெவுரி!—விண்ணவர்கள் வந்து பணிமுக்கோண நாயகி! விளையாடுகின்ற விமலி!—மாதமொரு பன்னிரண் டாய் மழையிலாமலே வையகந்தன்னி லெங்கும்—வாரிக்

---

* கீழச்சிவப்பட்டியிலிருந்து 5 மைல்.

குடித்திடத் தண்ணீரில்லாமலே மாடாடு வெகு சேதமாய்—சாதகமதாக ஒரு சன்ன மழை யிடையிலேதான் பெய்ய விதை தெளித்தோம்—தட்டுண்டு போன பயிர் போகவே நின்ற பயிர்தான் சோம்பி வாடுதம்மா!—ஏதம்மா! இப்படி நீ கொடுமை பண்ணினுல் ஏழைகள் தழைக்க வசமோ?—இருப்பதவுமுன் மனவுருக்கமும் வைத்து நீ எங்களது கலிய கலவே—நீதியாய் வருணனை யழைத்து நீ உத்தரவு நிச்சயம தாக அருளி—நீர்கொண்ட மேகங்கள் சூல்கொண்டு விம் மியே நெடுமாரி வலுவாகியே—ஆதிமுகடேறியே விண் ணெங்கு மின்னியே அசையாத காலூன்றியே—அன்புடன் முழக்கியே வெகு மழை பொழிந்திட ஆறு குளம் ஏரி யெங் கும்—கரையெலாம் பெருகியே மறுகால் திறந்திடக் கடாட் சம் வைத்தருள் புரிகுவாய்!—பாதிமதி யணிகின்ற வேத பஞ்சாட்சரி! பரப்பிரம்ம சிவ சொரூபிணி!—பட்டத்து மலையரசி! கிட்டத்துச் சூர்வளரும் பட்டத்துரைச்சி யுமையே!

---

## 6. திருமுக விலாசமும் சீர்திருத்தமும்

முத்தப்பரை இளமையிலே ஆட்கொண்ட சீர்திருத்த நோக்கம் பல இடங்களிலே வெளிப்படக் கண்டோம். கண் மூடித்தனமான எந்த வழக்கத்தையும் அவர் ஏற்றுக்கொள்ள மாட்டார். இப்போது அவரது சீர்திருத்தப் பணிகளில் தலையாய ஒன்றைப்பற்றித் தெரிந்துகொள்வோம் :

அந்தக் காலத்தில் தனவணிகர்களிடையே "மறியல்" முறை யிருந்தது. ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டால் நகரக் கோயிலில் வழக்கை "மறியல்" செய் வார்கள். ஆண்டுக்கு நாலைந்து முறை பெரிய கூட்டம் கூடி வழக்குகளைக் கேட்டுத் தீர்ப்புச் செய்வார்கள். அவர்கள் தீர்ப்பே முடிவானது. அதை மீறக்கூடாது. மீறுவதாகச் சொல்லவும் கூடாது. சொன்னுல் மறு கூட்டத்தில் வகை சொல்லியாகவேண்டும். வழக்கு விசாரணை நடக்கும்போது யார் பக்கம் ஆள் அதிகமாகச் சேருகிருர்களோ அவருக்குத்

தான் வெற்றி கிடைக்கும். (இன்றைய "மெஜாரிட்டி" முறை அன்றும் இருந்திருக்கிறது) இதனால் பலருக்குச் சரியான நீதி கிடைப்பதில்லை. இந்த முறை மாறவேண்டும் என்பது முத்தப்பர் விருப்பம். பெரிய கூட்டத்து முடிவுகளை எதிர்த்துப் பேசுவதும் ஒரு குற்றம். முத்தப்பர் இக்குற்றத்-துக்கு ஆளானார்.

ஒரு நாள் பெரிய கூட்டச் செயலாளரிடமிருந்து முத்தப்பருக்கு அழைப்பு வந்தது. முதலிலே இவருக்கு ஒன்றும் தெரியவில்லை. "அன்றைக்கு ஒருவரிடம் பெரிய கூட்டத் தீர்மானங்களை எதிர்த்துப் பேசினேமே; அதுதான் குற்றம்" என்று நினைத்துக்கொண்டிருக்கையில் *ஊனையூர் சுப்ப பண்டாரம் வந்து சேர்ந்தார்.

பண்டாரத்தைக் கண்டதும் முத்தப்பருக்கு ஒரு எண்ணம் வந்தது. "பண்டாரம்! இன்றைக்கு இங்கேதானே தங்கியிரு. நாளைக் காலையில் ஒரு ஓலைதருகிறேன். அதைக் கொண்டுபோய்க் கோத்தமங்கலம் நகரக் கூட்டத்தில் கொடுத்தால் உனக்கு நல்ல வரும்படி கிடைக்கும். சரிதானா?" என்றார். பண்டாரத்துக்கு வாயெல்லாம் பல்லாகிவிட்டது. "அப்படியே செய்கிறேன்" என்று பண்டாரம் சொன்னதும் முத்தப்பர் ஓலையை எடுத்து வாரிச் செப்பனிட்டுக்கொண்டு "விறுவிறு" என்று "திருமுக விலாசத்தை" எழுதி முடித்தார். "திருமுக விலாசம்" என்பது "நகரத்தார் புகழையும் அவர்கள் வண்மையையும் புகழ்ந்து, தன்னிடம் வந்து பொருள் கேட்ட பண்டாரத்தைக் கோத்தமங்கலத்தில் கூடியிருக்கும் நகரத்தாரிடம் செல்லுமாறு சொல்லி முருகன் "திருமுகம்" கொடுத்த வரலாறு கூறும் இனிய நூல்.

எழுதி முடித்த "திருமுக விலாச"த்தை எடுத்துக் கொண்டு பண்டாரம் கோத்தமங்கலத்துக்கு வந்து நகரத்தாரிடம் கொடுத்தார். தமிழ் நயத்திலே ஈடுபட்ட நகரத்தார்கள் முத்தப்பரின் குற்றத்தை மறந்து அவரைப் பாராட்டத் தொடங்கிவிட்டார்கள். அதோடு மட்டுமல்ல. முத்தப்பர் சொன்னது சரிதான் என்ற கட்சியும் வலுப்பெற்றது.

---

* திருமயத்திலிருந்து 3 மைல்.

பண்டாரத்துக்கு நல்ல வரும்படி. ஒவ்வொருவரும் இயன்றதைக் கொடுத்ததுடன் பொதுவில் ஒரு கட்டளேயும் ஏற்படுத்திக்கொடுத்தார்கள். அதாவது நகரத்தார்கள் செய்யும் ஒவ்வொரு திருமணத்திலும் ஊனேயூர்ப் பண்டாரத்துக்குச் சோறு போட்டு ஒரு பணம் கொடுப்பது. இந்தக் கட்டளே கடந்த பத்து ஆண்டுகளாகத்தான் சரிவர நடைபெறவில்லே. அதுவரையிலே நடந்துவந்தது.

அன்று கலேந்த நகரக் கூட்டம் இன்றுவரை சரிவரக் கூடவில்லே. தனவணிகர்களிடையே இன்று விழிப்புத் தென்படுகிற தென்ருல் அதற்கு முத்தப்பர்தான் காரணம். "திருமுகவிலாச" த்தில் அவரது பணியுள்ளத்தை*—புறங் காட்டாத நெஞ்சத்தைக் காணுகிருேம். அதில் வரும் "நகரத்தார் எல்லாரும் நம்மடியார்" என்ற அடியிலே அவரது தன்னம்பிக்கை ஒளிவிடுகிறது.

முத்தப்பர் இயற்றிய "திருமுக விலாசம்" கம்பன் இயற்றிய "ஏர் எழுபது" ஒட்டக்கூத்த னியற்றிய "ஈட்டி எழுபது" ஆகிய நூல்களுடன் ஒப்பிடத்தக்க நயம் வாய்ந்த பெரு நூல்.

---

## 7. அரங்கேறிய முத்தப்பர்

முத்தப்பர் தமது ஐம்பத்தெட்டாவது ஆண்டில், நல்லதொரு நாளில் "ஜெயங்கோண்டார் சதகம்" என்ற நூறு பாடல்களுடைய நூலே எழுதத் துவங்கிச் சில நாட்களில் எழுதி முடித்தார். அந்த நூல் நேமத்திறைவன் "ஜெயங் கோண்ட சோழீசன்" மேல் பாடப் பெற்றது. அது நூறு வரலாற்றுக் கதைகளேயும் அவைகளுக்குரிய பழமொழிகளேயும் எடுத்துரைப்பது. சீர்திருத்தம் என்பதை ஒவ்வொரு துறையிலும் புகுத்திய முத்தப்பர் பழைய நூல்களான அறப்பளீசுர சதகம், குமரேச சதகம் போன்று அரசரியல்பு, வணிகர் நெறி, நகர வளம் கூறுவது, என்ற பழைய முறை

---

* விவரங்கள் " முத்தப்பர் நூல் நய "த்தில் காண்க.

களைக் கையாளாது "கதையும் பழமொழியுமாகக் கலந்து" அமைத்தார். இந்த நூல் அரங்கேறியதைப் பார்ப்போம்:

இதைப் பாடியதன் நோக்கம் "தனவணிகர்கள் வளம் பெறவேண்டும்" என்பதுதான். எனவே முதலாவதாகத் திருமகளை நோக்கி, "நீ என்றைக்கும் எங்கள் தனவணிகரை விட்டு நீங்கக்கூடாது" என்று வந்தித்து உறுதி பெற்றுக் கொண்டார். அப்போது அவர் பாடிய பாடல்கள் பின் வருவன. இவையும் "ஜெயங்கொண்டார் சதக"த்துடன் அரங்கேற்றப் பெற்றன.

## திருமகள் அருள் வேட்டல்

"காடுவெட்டிப் போட்டுக் கடியநிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர்—வீடுகட்கு
அன்றைக்கு வந்த எங்கள் அம்மா! இலக்குமியே!
என்றைக்கும் நீங்கா திரு!"

"நின்மேலுமாணை: நின்மகன்மேலுமாணை: நின்மாக்
[கொழுநன்
தன்மேலுமாணை: தமிழ்மேலுமாணை: தவமாவணிகச்
சின்னஞ் சிறுவர் தெரியாத காளையர் என்செயினும்
பின்னும் பொறுத்திருப்பாயே! பெரிய இலக்குமியே!"

"நீங்காது நின்மகனும் நெடிய திருமாலும்
பாங்காக அன்றுவந்த பாற்கடல்போல்—தேங்காமல்
நன்றாக நீயிருந்து நாளும் வளம்பெருக்கி
என்றைக்கும் நீங்கா திரு!"

இரண்டாவது பாட்டில் தமிழ்மேல் ஆணையிடுகிற நயம் எண்ணியெண்ணி உருகத்தக்கது. எந்தத் தமிழனாவது "தமிழ் அறிய" "தமிழுக்குப் பொதுவாக" "தமிழுக்குத் தெரிய" என்று சத்தியம் (உறுதி) செய்கிறானா? எந்தப் புலவனாவது "தமிழ்மேல் ஆணை" யிட்டிருக்கிறானா? இல்லை. முத்தப்பாது பெரும் புலமை பலப்பல புதுமைகளையும் செய்து புகழ் பெற்றது.

நூலும் எழுதி முடிந்தது. நேமம் நகரத்தார்கள் தைத் திங்கள் முதல் நாளிலே—தைப் பொங்கலன்று—நேமத்தில்

அரங்கேற்றத் தீர்மானித்தார்கள். அதன்படி அன்று மிதிலைப் பட்டி வேலுக் கவிராயர், செவ்வூர் அழகுப் புலவர், வெண்பாப் புலி, ஊனையூர்ப் பாரதியார், சுந்தர முதலியார், வேம்பத்தூர் மார்த்தாண்டப் புலவர் முதலான பலரும் வந்து கூடினர். சேனுபதியாரும் முத்துராமலிங்க ஆண்டவரும் கல்லாப்பேட்டைச் சிற்றரசரும் சிவகெங்கை அமைச்சர் முத்தழகு பிள்ளையும் மற்றும் பலரும் பரிசிலும் செய்தியும் அனுப்பியிருந்னர்.

குறிப்பிட்ட நேரம் வந்ததும் வயதில் முதிய தனவணிகர் ஒருவர் "முத்தப்பய்யா! செட்டியார்களின் நன்மையைக் கோரிச் செயங்கொண்டார்பேரில் பஞ்சாட்சரப் பதிகம் ஒன்று பாடவேண்டும்" என்று வேண்டவே முத்தப்பர் பாடினர்:

"நன்றேபெருக! நவிலுங் குபேரநகர் வணிகர்
என்றேயுலகம் புகழ அவர்க் *கீண்டிருநிதியம்
நின்றேநிலவ! அறமும் கனமும் நெடிதுபெறத்
தொன்றே சோளீசர் செயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே!"

"மன்னும்பெருமை பெருகிக் குபேரநகர் வணிகர்
என்னும் மகிமையுறவும் வறியவர்க் கீந்திடவும்
பொன்னும் பொருளும் புவியுமப் போகமும் பொருந்
[திடவும்
துன்னும் சோளீசர் செயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே!"

"சிவனாலயமும் திருமால் பணியும் சிறப்புறத்தான்
நவமாய்ப் புதுக்கியும் ஆக்கியும் மேலோர் நவிலுநல்ல
தவமாமி தெனத் தரணியிலோங்கவும் தாங்கு †மகத்
துவமா சோளீசர் செயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே!"

---

* இருநிதியம் = பெருஞ் செல்வம்.

† மகத்துவம் = பெருமை.

“வந்தார்க்குதவும் வணிகர் : குபேரனும் வளமையர்க்கும்
பிந்தார் : தனத்திலிவரே யுலகிற் பெரியரெனச்
சிந்தார்புர *இளையாற்றங் குடியார் சிறப்புறவும்
சொந்தார் சோளீசர் செயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே!”

“யவனம் கலிங்கம்தமிழ் சிங்களம் யாண்டுமுள்ள
புவனமெலா மிவர்வர்த்தக மோங்கவும் புண்ணியம்சேர்
தவமும் திருவும் தங்கவணிகர் தாம்பெறவும்
துவச சோளீசர் செயங்கொண்டார் பாதம்
[துதிக்குதுமே!”

பாட்டின் நயங்கண்டு பலரும் வியந்தனர். நூலுக்குரிய காப்பைச் சொன்னதும் ஊனையூர்ப் பாரதியார் எழுந்துநின்று அவையினரும் முத்தப்பரும் சம்மதம் தந்ததும் கீழ்க்கண்ட பாடலைச் சொல்லி விடை கேட்டார் :

“ஓங்கு பத்மாசூரனைக் கண்டோடி ஒளிந்தார் : விஜயன்
வாங்குதனுவாற் பூசை வாங்கினார்—ஈங்கிருக்கும்
நன்னேமச் சோளீசனார் செயங்கொண்டார் என்றால்
என்னசெயங் கொண்டா ரிவர்?”

பாரதியார் பாடி நிறுத்தியதும் முத்தப்பரது மறுமொழி பிறந்தது.

“என்ன செயங் கொண்டார் இவரென்றான் :
[முப்புரதைச்
சொன்ன மயமாய்ச் சமைத்த சோளீசர்—பின்னும்
சிரித்துச் செயங்கொண்டார் : சித்தசனைக் கண்ணால்
எரித்துச் செயங்கொண்டா ரிவர்!”

அவை கலகலத்தது. “சிரித்துச் செயங்கொண்டார்” என்ற அடியின் பொருள் நுட்பம் அவையினரை மயக்கி விட்டது.

பின்னர் உற்சாகத்தோடும் பல பாராட்டுச் சொற்களுக் கூடே, தலைப்பிலிருந்து கடைசிவரை படித்துப் பொருள்

---

* இளையாற்றங்குடியார் = ஏழூர் நகரத்தார்கள் பொதுப்பெயர்,

சொல்லி அரங்கேற்றி முடித்தார் முத்தப்பர். பலர் பல பரிசில்கள் ஈந்தனர். பெரும் பரிசு கிடைத்தது என்பதைத் தவிர வேறு செய்தி யெதுவும் கிடைக்கவில்லை. அவை கலையும் நேரத்தில் முத்தப்பர் அனைவருக்கும்—சிறப்பாக வணிகர்களுக்கும்—நன்றியுரையாகப் பின்னுள்ள பாடலைப் பாடி விடை பெற்றார்.

“ பரிசினையே வேண்டியின்றால் பாடிவந்தோம்: மிக்க
பரிசும் உளதென் றளித்தீர்: பற்றி—ஒரு சிலையை
வில்லாய் வளைத்த செயங்கொண்டார் திருவருளால்
எல்லாரும் வாழ்வீர் இருந்து.”

“பாடுவோர் முத்தப்பர் வாழ்க!” “வாழ்க முத்தப்பர்!” என்ற முழக்கத்துடன் தெய்வ வணக்கம் நிகழ்ந்தது. வந்தவர் அனைவரும் உண்டி யருந்தி ஊர் சென்றனர். முத்தப்பர் திருவருள் பெற்ற தனவணிக இளைஞர்கள் இன்று பல்துறை யறிவிலும் மேம்பட்டு வருகிறார்கள். அவர்களது நூல்களும் நகரக் கோவில்களிலே அரங்கேறும் நாள் விரைவில் வருவதாக!

---

## 8. முதுமை பெற்றதும் முழுமை கண்டதும்

முத்தப்பரது தனிப் பாடல்களில் சிலவற்றை முன்னே பார்த்தோம். அவர் இயற்கை யெய்தும்போது அவருக்கு வயது எழுபத்து மூன்று. நாற்பதாவது ஆண்டு முதல் அதுவரையிலே அவர் வாழ்வில் நிகழ்ந்த சில செய்திகளையும் அவர் பாடிய சில தனிப் பாடல்களையும் இப்போது பார்ப்போம்:

ராங்கியம் கருப்பர் இவருக்கு வழிபடு தெய்வம். கருப்பர் பேரில் குளுவ நாடகம், குதிரையடி விருத்தம் முதலான பல நூல்களும் பாடல்களும் இயற்றியுள்ளார். ஒரு முறை இவர் பாடிய திருத்தாண்டகம் இது:

“ சிலையானைப் படையெடுத்த செங்கையானைத்
திகழுறங்காப் புளியானைத் தினமும்சித்ர

முலையார்கள் மடலெழுதும் வடிவத்தானை
முத்திதரும் மெய்ஞ்ஞான மூர்த்தியானைக்
கலையானை நறுந்துளவமார் பத்தானைக்
கமழ்பெரிய கறுப்பணனைக் கடாட்சத்தானை
மலையாளத் துரையானை என்னுளத்தில்
வந்தானைக் கண்டடியேன் வணங்கினேனே!"

## தல்லாகுளம் கருப்பர் அகவல்

முத்தப்பர் மதுரைக்குச் சென்றிருந்தபோது தல்லாகுளம் கருப்பர்பேரில் ஒரு அகவல் பாடினார். அது அச்சாகியிருக்கிறதாம். இப்பொழுது கிடைக்கவில்லை. அந்த நூலின் காப்புப் பாடல் அடியில் வருவது:

"தாருலவு திண்புயத்தான்: தல்லாகுளத்தில் வளர்
காருலவு மேனிக் கருப்பணன்மேல்—சீருலவு
செஞ்சொல் லகவலுக்குச் சித்திவிநாயகனார்
கஞ்சமலர்த் தாளிணையே காப்பு"

## திருநெல்வேலிச் சைவர் சீர்கேடு!

இவர் ஒரு முறை குன்றக்குடிக்குப் போயிருந்தபோது அங்கே தேவாரம் படிக்கவந்திருந்த சைவர்கள் இவரிடம் வந்து "எங்கள் பேரில் ஒரு பாட்டுப்படிக்க வேண்டும்" என்று வற்புறுத்தினார்கள். எத்தனை மறுத்தும் கேட்காது போகவே இவர் படித்த பாடல் இதுதான்!

"ஒரு நெல் பிறர்க் குதவார்: ஊர் முதலில் ஆசை
திரு நெல் வேலிச் சைவர்க்கம்ம!—அருமையொடு
தம்பியென்னும் அண்ணனென்றுந் தாம் பேசுவாரவரை
நம்பினாற் போதும் : மிக நன்று!"

கவிஞனை வற்புறுத்தினால் இப்படித்தான் பாடமுடியும்.

## செட்டிமார் நாட்டெல்லை

இவர் "செட்டிமார் வரலாறு" என்ற தோர் நூலியற்றியதாகச் சிலர் சொல்கிறார்கள். நூல் இருப்பதாகத் தெரியவில்லை. பின்வரும் பாடல் செட்டிமார் நாட்டின் எல்லை பற்றியது.

“வெள்ளாறது வடக்காம் : மேற்குப்பிரான் மலையாளம்;
தெள்ளார் புனல் வையை தெற்காகும்—ஒள்ளியநீர்
எட்டிக்கடல் கிழக்காம் : இஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டி நாட்டெல்லை யெனச் செப்பு”

## உச்சினி மாகாளியம்மன் கும்மி

இவரது அறுபதாவது ஆண்டில் செட்டிமார்நாடு முழுவதும் அம்மைநோயும் வயிற்றுப்போக்கும் கணக்குவழக்கின்றிப் பரவி எண்ணற்ற மக்களைக் கொன்றுகுவித்தது. இதுகண்ட முத்தப்பர் உச்சினிமாகாளியம்மன் பேரில் ஒரு கும்மி இயற்றி ஊர்கூட்டிவைத்து அரங்கேற்றினார். சில நாட்களில் தேவியருளாலும் தேவியைநம்பிய மக்களின் செயல்களாலும் நோய் ஒழிந்தது. செட்டிநாட்டுமக்கள் முத்தப்பரை மனங்கொண்டமட்டும் வாழ்த்தினர். *“உச்சினிமாகாளியம்மன் கும்மி” எளிமையும் இனிமையும் வாய்ந்தது. இது அச்சிடப்பெற்றிருக்கிறது.

## மகனுக்கே அறம் வைத்த வாக்கு!

முத்தப்பர் வாழ்விலே செய்த ஒரு பெருங் கெடுதி அவரது மூத்த மகனான கருப்பன் செட்டியாரின் புலமையை ஒடுக்கியதே! கருப்பன் செட்டியார் கற்றுத் தேறியிருந்தால் நாம் இன்று முத்தப்பரின் வழி வழிச்சேய்கள் பல தமிழ்தர வாழ்ந்திருப்போம். ஆனால் முத்தப்பருடைய—இல்லை நம்முடைய தவக்குறை இந்த அரியவாய்ப்பை நமக்குத்தர மறுத்துவிட்டது. ஆம். முத்தப்பர் என்னசெய்வார்? புலவர்களின் வாக்கில் அவர்களையறியாமலே அறம்விழுந்துவிடுகிறது!

சர்க்கரைக் கருப்பையா இளமையிலேயே கலைமகள் அருள் பெற்றிருந்தார். தனது பதின்மூன்றாவது ஆண்டில் இவர் அவித்த நெல்லைப் பாறையில் விரித்துக் காவலுக்கிருக்கையில் காக்கைகள் வந்து தொல்லைப்படுத்தின. (அந்தக் காலத்தில் நெல்லை அவித்துப் பாறையில் ஆலாட்டுவது வழக்கம்) காக்கையை விரட்டிக்கையோய்ந்த ஒரு சிறுவன் “சா

*உஜ்ஜியினி நகரிலுள்ள (விக்கிரமாதித்தன் வழிபட்ட) அம்மன்.

குருவிசாசா" என்றான். அவனது நிலைகண்டு மனங்கிளர்ந்த கருப்பையா தன்னையும் மறந்து (பின்விளைவதறியாமல்) பாடத்தொடங்கினர். முதற்பாட்டிலேயே அறம்—முற்றிய அறம்—விழுந்துவிட்டது.

"காகா வெனக் கதறும் காகங்காள்! இப்பொழுதே
போகாது போனலோ பொல்லாப்பாம்!—சாகாதீர்!
நெல்லை யருந்துதற்கு நீர்வந்தீர்: யானுமக்குச்
சொல்லிவைத்தேன்: செல்வீர் தொலைந்து."

என்று பாட்டை முடித்ததும் காக்கைகள் சிறகலுத்துச் செத்து விழுந்தன. முத்தப்பர் குளித்துவிட்டு வந்தவர் மகனையும் செத்துக்கிடந்த காக்கைகளையும் மாறிமாறிப் பார்த்தார். "தலையிருக்க வால் ஆடுகிறதோ" என்று சொன்ன பிறகுதான் அவருக்குத் தன்னுணர்வு வந்தது. "பையன் ஒடுங்கிவிட்டானே! அவனது புலமையை ஒடுக்கி விட்டேனே!" என்று வருந்தினர். பிறகு என்ன செய்தும் கருப்பன் செட்டியார் கற்ற கல்வியை வெளியிட முடியவில்லை. ஆஹா! புலவர்கள் வாக்கை அவர்களே மாற்ற முடிய வில்லையே!

## பாகனேரி வழக்குப்பற்றிய செய்தி

இவர் காலத்தில் பாகனேரி ஊராருக்கும் சிவகெங்கை அரசாங்கத்துக்கும் எல்லைத் தகராறுபற்றி ஒரு வழக்கு நெடு நாளாய் நடந்துவந்தது. பாகனேரி ஊரார் வழக்கிழந்த நிலை யில் முத்தப்பரை அணுகினர்கள். முத்தப்பர் அவர்கள் சார்பிலே பாகனேரி புல்வாய் நாயகியம்மனிடம் ஒரு பாடல் சொல்லி முறையிட்டார். வழக்கு பாகனேரி ஊராருக்குச் சாதகமாக முடிந்தது. முத்தப்பர் உள்ளவரையிலே பாகனேரி ஊரார் அவருக்குப் பொங்கற்பானை கொடுத்துவந்தார்கள். இதுபற்றிய வரலாறு விரிவாக எழுதப்படவேண்டும்.

## புலவருக்கு அளித்த உதவி

முத்தப்பர் தன்னிடம் வந்து வறுமையால் வாடுவதாய்ச் சொல்லும் புலவர்களுக்கெல்லாம் சிபாரிசுக் கடிதம் கொடுத்து உதவிவந்தார். உதாரணமாக ஒன்று பார்ப்போம்: வேம்பத்

தூர் மார்த்தாண்டப் புலவர் என்ற இவரது நண்பர் ஒருவர் இவரிடம் வந்து உதவி வேண்டியபோது "புலவர்கள் பொய்யையும் புளுகையும் பாடியதால்தான் அவர்கள் பரிசு பெறுவதில்லை" என்ற கருத்துடன்,

"படியாத மூடனையோ படித்தா யென்பீர்!
பணமற்ற வறிஞனையோ பாக்கியன் என்பீர்!
குடிகாரப் போக்கிரியைக் குணவான் என்பீர்!
குன்றுரும் புயமென்பீர் கூனல் தோளை!
வடிகட்டும் கஞ்சனையோ வள்ளல் என்பீர்!
வன்போரிற் புலியென்பீர் வலியிலானை!
விடியாத மூஞ்சியையோ வேந்தன் என்பீர்!
வினைவிடுமோ பொய்க்கவிதான் விளம்புவோர்க்கே"?

என்று அவருக்கு அறிவுரை கூறினர். பின்னர் ஆத்தங்குடிக் காடப்ப செட்டியாருக்கும் நேமம் நகரத்தாருக்கும் அடியிற் கண்ட இரண்டு சிபாரிசுக் கடிதங்கள் எழுதி யளித்தார். அவர் சொன்னபடியே புலவருக்கு ஆத்தங்குடியில் அவமதிப்பும் நேமத்தில் பெரும் பரிசும் கிடைத்தன. மார்த்தாண்டப் புலவரும் முத்தப்பரை மனமார வாழ்த்தியதுடன் அன்று முதல் வீணரைப் பாடுவதை விட்டொழித்து வாழ்ந்திருந் தார்.

## ஆத்தங்குடிக் காடப்ப செட்டியாருக்கு

"அம்பலகாரா என்றே ஆயிரம் தரம் சொன்னலும்
வம்பருக்களிக்கும் செம்பொன் வறியவர்க் கீயொணுதோ?
நம்பருக் களியாச் செல்வம் நஞ்சினுங் கொடிது கண்டாய்
தம்பி காடப்பா! நீ யித்தமிழ்ப்பய னறிந்திடாயே!"

## நேமம் நகரத்தார்களுக்கு

"இத்தரை முழுதும் இசைபெறு நம்மீர்!
முத்தப்பன் யான் மொழிவது கேண்மின்!
செந்தமிழ்ச் செல்வச் சீமா னிவர்தாம்
வளம்பெறு நிம்பை மார்த்தாண்டப் புலவர்
மடப்பளி யடுப்பு மறந்தது தொழில்: அதில்
ஆம்பி பூத்ததாம்: ஆதலினல் இவர்

நம்பா லுற்றனர் நாவல ரிவர்க்கே
வேண்டும் பரிசில் விரும்புவ தளித்தும்
ஆண்டிவர் வறுமைநோய் அறவே களைந்தும்
சிறப்புற அனுப்புவீர் சீரார் நேம
நகரிற் குபேர நலம் படைத்தோரே!"

---

## முத்தப்பர் முழுமை பெற்ருர்!

இவரது எழுபத்து மூன்ருவது ஆண்டுத் தொடக்கத்தில் மூத்த மகன் கருப்பஞ் செட்டியார் ஒரு பெரு வழக்கில் ஈடுபட்டுத் துன்புற்ருர். அப்போது தளர்ச்சி பெற்றிருந்த முத்தப்பர் மலைபரசியிடம் முறையிட்டு மகனுக்கு நீதி யளித்தார். ஆயினும் உடல் நலம் வரவரக் குன்றியது. காய்ச்சல் அடிக்கடி வந்து கவலைப்படுத்தியது.

முடிவிலே தனவணிக மக்களுக்குப் பெரு வாழ்வும், தமிழுக்குப் புது நலமும் தந்த முத்தப்பர் சுபானு ஆண்டு ஐப்பசித் திங்கள் வளர் பிறை ஆறும் நாளில் (பூர்வ பட்சம்: சஷ்டி) பகல் பதினைந்து நாழிகையில் முத்தி பெற்ருர். அவரது வெளியுலக வாழ்க்கை முற்றுப்பெற்றது. புகழுடம்பை நிலைநிறுத்திவிட்டு அவரது பூத உடம்பு மறைந்து விட்டது.

---

## 9. நமது கடமை

முத்தப்பரின் பொய்யுடல் மறைந்துவிட்டது. அவர் பாட்டுக்களும் மறைந்து கிடக்கின்றன. ஆனல் அவருடைய உயிர் நம்மிடையே இயங்கிக்கொண்டிருக்கிறது. பல இளைஞர்களை அவர் தூண்டிக்கொண்டிருக்கிருர். இன்று அவரது நினைவுச் சின்னங்களாக அவரது திருவுருவச் சிலையும், அவரது பெயரால் நிறுவப்பெற்ற "முத்தப்பர் கழகமும்" திகழ்ந்துகொண்டிருக்கின்றன. ஆண்டுதோறும் அவர் முத்தி பெற்ற நாளிலே அவரது கிளைவழியினர் குரு பூசை நடத்திக்கொண்டு வருகிருர்கள். பொது மக்களாகிய நாம்

—சிறப்பாக வணிக மக்களாகிய நாம்—செய்யவேண்டிய கடமை என்ன என்று பார்ப்போம்:

முத்தப்பர் நமக்காக—நாம் வாழ்வதற்காகவே—வாழ்ந்தவர். அவரது அருள் வாக்கு நம் வாழ்வை உயர்த்துவதற்கே பயன்பட்டது. முத்தப்பர் நமக்குச் செய்திருக்கும் அளவிறந்த சேவைகளுக்கு நாம் செய்யவேண்டிய—செய்யக்கூடிய—கைம்மாறு ஒன்றே ஒன்றுதான். அதுதான் அவரது குறிக்கோளை உணர்ந்து அவரது எண்ணங்களைச் செயலாக்குவது.

முத்தப்பரது வாழ்வையே "அஞ்சாமை—கட்டுக்கடங்காத நெறியார்வம்—பணி செயலுறுதி" என்ற சொற்களிலே அடக்கிவிடலாம். இன்று முத்தப்பர் இருந்து நாம் அவரை அறிவுரை எழுதித் தரும்படி கேட்டோமானல் அவர் "துணிவும், ஓயாத பணியுணர்ச்சியும், கட்டற்ற உள்ளமும், பிறர் துயர் கண்டு துன்புறும் வண்மையும் தான் ஒரு மனிதனை உயர்த்த முடியும். துயரை மகிழ்ச்சியுடன் ஏற்று அதைத் தன் வலியால் நலமாக்கும் சக்தி பெற்ற மனிதன் தான் உயர முடியும்" என்றுதான் எழுதிக் கையெழுத்திடுவார். இது என்னுடைய கற்பனைச் சொல்லல்ல. உள்ளத்தில் எழுந்த சொல். உணர்ச்சியிலே எழுந்த கருத்து. என்மூலம் முத்தப்பர் எழுதிய முது சொற்கள். இனி முத்தப்பரது கொள்கையை எப்படிப் பின்பற்றுவது? என்ற முடிவுக்குத்தான் நாம் வரவேண்டும்.

முத்தப்பரைப் பின்பற்ற எண்ணும் ஒருவன் முதலாவதாகப் பிறர் ஏச்சுக்களைப் பொருட்படுத்தாது தன் சமுதாயம் (சமூகம்) உயர்ந்து வளரப் பணியாற்றவேண்டும். இரண்டாவதாகத் தன்னால் முடிந்தவரை ஏழை எளியவர்களுக்கு நீதியும் வசதிகளும் கிடைக்கும்படி செய்யவேண்டும். மூன்றாவதாகத் தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் போற்றிப் புரக்கவேண்டும். இவைதான் முத்தப்பரின் ஆவி நம்மிடமிருந்து—எதிர்பார்க்கும் கையுறைகள்!

முத்தப்பரைப்பற்றி எவ்வளவோ எழுதலாம்: எழுதிக்கொண்டேயிருக்கலாம். இதுபோன்ற பத்து நூல்களாவது

வெளிவந்தால்தான் முத்தப்பரைப்பற்றி உலகம் சரிவரத் தெரிந்துகொள்ள முடியும். முத்தப்பர் காலத்திலே மரக் காலிலே சரக்களந்து விற்ற வணிக மக்கள் அவரது வாக்கின் சக்தியினலே இன்று பற்பல தொழில்களிலும் பங்கு பற்றி வருகிறார்கள். விரைவிலேயே உலகாட்சி அவர்களை நாடி வரவும் காத்திருக்கிறது. எனவே வணிகர்களாகிய நாம் மட்டுமல்ல, தமிழர்களும் முத்தப்பரை மறக்கமாட்டார்கள். நம்மாலும் தமிழர்களாலும் வாக்காளர் முத்தப்பரை மறக்க முடியாது மறக்கவும் நமக்கு உரிமை யில்லை.

முத்தப்பரைப்பற்றி யறிவதற்குத் தமிழ் நாடு துடித்துக் கொண்டிருக்கிறது. செட்டிநாடு முத்தப்பர்பற்றிய செய்தி களைத் தேடிக்கொண்டிருக்கிறது. இளைஞர்கள் ஒருவரை யொருவர் முத்தப்பர்பற்றிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். எனவே இந்தத் துடிப்பின் காரணமாகத்தான் ஆயிரமாயிரம் ஏடுகளிலே வரவேண்டிய அவரது வரலாறு இந்த அளவிலே வெளிவருகிறது. அவரது கருத்துக்கள் முழுவதையும் வெளியிடவேண்டியது நமது முதற் கடமை. இந்தக் கடமையைச் செய்ய உரிமையுள்ளவர்கள் நமது தமிழ் (வணிக) இளைஞர்கள்தான். எனவே இளைஞர்கள் இந்தக் கடமையை ஆற்றி உரிமை பெற முன்வருவார்களாக!

நமது கடமையை நாம் ஓரளவிலே தெரிந்துகொண்டு அதைச் செய்ய இன்றுமுதல் நாம் முற்படவேண்டும். முத்தப்பர் பெயரால் நாடு முழுவதும் கழகங்களும் கல்லூரி களும் நிறுவவேண்டும். எட்டுத்திசையிலும்—எல்லாமொழி களிலும்—அவர் புகழைப்பரப்பவேண்டும். அவர் எண்ணிய எண்ணங்களைச் செயலாக்க வேண்டும். இவைகளைச் செய் வதுதான் நம் கடமை.

நமது கடமையைச் சரிவரச் செய்து வாழ்வு பெற நமக்கு இறைவன் அருள்தருவாராக! முத்தப்பரது அருள் வாக்கு நமக்குத் துணைதருமாக! நமது கடமையுணர்ச்சி நமது செயல்—நம்மிடையே பல முத்தப்பர்களைத் தோற்று விக்குமாக! "வாழ்க முத்தப்பர்! வளர்க முத்தமிழ்!"

தமிழுக்கு வெற்றி!



ஸ்ரீ பண்டரி பிரஸ், 26, பிராட்வே, மதராஸ்.